
# நீதி

படிகள் பல. விலை ரூபா 7-00




- 'நான் இரும்பால் ஆன மனிதன் அல்ல. ஆனால்! எனது இதயம் இரும்பிலும் கடினமானது, ஏனெனில் நான் நீதியை நேசிப்பவனாதலால்.'

- 'மானிட வாழ்க்கையைப் பற்றி நீ புரிந்து கொள்வது அப்படி ஒன்றும் கடினமானதல்ல. ஆனால் உன்னை நீ உணர்ந்து கொள்ள! உனது வாழ்க்கையைப் பற்றித் தெரிந்து கொள்வது மிகவும் கஷ்டமான காரியமாகும்'.

- 'இன்னொருவருடைய வாழ்க்கையைப் பற்றி நீ ஆராய்வதற்கு முன்பாக உன்னுடைய வாழ்க்கையைப் பற்றி ஆராய்ந்து அறிந்து கொள். ஏனெனில் நீ உலகத்தைப் புரிந்து கொள்வதற்கு அது மிகவும் முக்கியமானதாகும்'.

# நீதி அச்சகம்

நியாயமான தேவை! அளவான ஆசை!!
தரமான சேவை!!!
என்பவற்றை அடிப்படையாகக் கொண்டு

அற்ஹோம், மணவிழா, பூப்புப்புனித
நீராட்டு, பிறந்த தின விழா

போன்ற மங்களகரமான நிகழ்ச்சிகள்
உட்பட உங்களது அனைத்து
அச்சுப்பதிப்புத் தேவைகளுக்கும்
இன்றே நாடுங்கள்!

# நீதி அச்சகம்

குருநகர் : : யாழ்ப்பாணம்.



இப்பிரசுரம் யாழ்ப்பாணம் இல: 57/1, ஸ்ரான்லி வீதியில் வசிக்கும் எஸ். ராஜசேகரால், யாழ்ப்பாணம், காங்கேசன் துறை வீதியிலுள்ள ஸ்ரீ காந்தா அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளியிடப்பெற்றது.

*ஆசிரியர் கருத்து*

# இதயத்தின் ஆதங்கம்

**வி**ஞ்ஞானம் மிக வேகமாக! சாதாரண பாமர மக்களின் கற்பனைக்கும் எட்டாத தூரங்களைக் கடந்து வியக்கத்தக்க அற்புதச் சாதனைகளைப் புரிந்து முன்னேறி உச்சக் கட்டத்தை அடைந்துள்ள இன்றைய காலகட்டத்தில் கூட! உயிரின் பின்னணியைக் கண்டு கொள்ள, எந்த ஞானியாலும் எப்பேறற்பட்ட விஞ்ஞான மாமேதைகளாலும் முடியவில்லை.

அதே சமயம் குறுகிய அறிவுக்குட்பட்ட விஞ்ஞானத்தின் கண்டுபிடிப்புக்களால்! உலகுக்கு அள்ளிவழங்கப்பட்ட படாடோப சுகபோகங்களிலும். கவர்ச்சிமிகு மாயைகளிலும் மோகம் கொண்டு மயங்கிய மனித இனம். சுயநலன்களிலும், சுயலாப நோக்கங்களிலும் மூழ்கி. தன்னுயிர் போன்ற சக உயிர்களின் மகத்துவத்தை உணரத்தவறி. பிறருடைய தேவைகளைப் பறித்து அவர்களை அழித்துவாழ முற்பட்டதிலிருந்தே! பல்வேறு வகையான வேறுபாடுகளும். விஸ்பரூபமெடுத்து மனித குலத்தை வதைக்க ஆரம்பித்தன:

இவற்றின் பின் விளைவுகளையே! இலங்கை உட்பட பல நாடுகளிலும் இன்று நடைபெறும். பல விதமான போராட்டங்களும் எடுத்துக் காட்டுகின்றன:

எமது நாட்டைப் பொறுத்தவரையில் சமூக சீர்கேடுகள். மலிந்து காணப்படும் இன்றைய காலகட்டத்தில் அனைத்து மக்களின் எதிர்காலமும் எவ்வாறு அமையும்? என்பதே பெரும் கேள்விக்குரியதாகவுள்ளது.

இந்நிலையில் எமது எதிர்கால சந்ததியினரின் நல்வாழ்வும் மிக அவசியம் எனக் கருதும் சீரான நடைமுறைகளின் உறுதிப்பாடும். சமூகத்தைப் பற்றிச் சிந்திக்கும் காலகட்டத்தில் அடியெடுத்து வைத்திருக்கும் உயர்வகுப்பு மாணவ, மாணவிகளாகிய உங்களிடமே என்பது எத்தரத்தில் உள்ளவராலும் மறுத்துரைக்க முடியாத ஆணித்தரமான உண்மையாகும்.

எனவே! சிந்தனைகளில் தெளிவோடும், செயற்பாடுகளில் தூய்மையோடும். கள்ளங் கபடமற்ற இதயத்தோடும் வாழ விரும்பும், வாழவேண்டிய உங்களுக்கு! இந்நூல் ஒரு சிறு புள்ளியளவாவது உதவி புரியும் என்று நம்பியே இதனை வெயிடுகின்றோம்.

இவ்வாறான நூல், மாதா மாதம் தொடர்ந்து உங்களுக்கு கிடைக்க, உங்களுடையவும், ஈன்றெடுக்காத் தாய்தந்தையருடையவும். நல் ஆசியையும், பூரண ஆதரவையும் வேண்டுவதோடு! உங்களை அறவழியில் கொண்டு செல்லத்தக்க சிறந்த தரமான ஆக்கங்களையும் எதிர்பாாக்கிறோம்.

நன்றி!

— ஆசிரியர்

## பணிவுக்கு முதலிடம்
## பணிவது தாழ்வல்ல.

ஒவ்வொரு மனிதரும்: தன்னுடைய வாழ்க்கைக்குக் கொடுக்கும் முக்கியத்துவத்தை: தான் அறியாத பிறருக்கும் கொடுப்பதே உண்மையான பணிவுக்குட்பட்ட பண்பாகும். பணிவால் பல மனிதர்களைச் சம்பாதித்துக்கொள்ளலாம். மனிதனை மனிதன் மதிக்கும் நிலையைப் பணிவால் மட்டுமே உருவாக்க முடியும்.

சிறந்த அறிஞன் என்ற புகழ் பணிந்து நடப்பதனால் மட்டுமே கிடைக்கும் பெயர்.

பணிவை மறப்பது: மனிதனை மனிதன் மதிக்கத்தவறுவது, தன்னுடைய வாழ்க்கைக்கு மட்டும் முக்கியத்துவம் செலுத்துவது சமூகத்தின் ஒட்டுறவை இழக்க வைப்பதோடு, உலகை அவுழி பாதையில் இருந்து மீட்டெடுக்க ஒருபோதும் பயன்படாது.

இவ் உண்மைகளை உணருபவர்கள பணிவதைத் தாழ்வாகக் கருதமாட்டார்கள்.

பணிவுக்கு அர்த்தம்: விட்டுக்கொடுக்கும் மனப்பன்மையாதலால்: உலகில் பணிவுக்கே முதலிடம் கொடுக்க வேண்டுமென்பது. இயற்கையின் நியதியும் — நீதியுமாகும்.

## அன்பே நீதிதேவதையின் ஜீவநாடி

உலகில் வாழும் பலகோடி ஜீவராசிகளுக்கும் " அன்பு " பொதுவானதோர் குணம்சமாகும். மனித வாழ்க்கையின் அடிப்படை ஆதாரமே அன்பாகும்.

அன்பே உலக மகா சத்தி எனவும், அன்பே பேரின்ப ஊற்று எனவும் அன்பைக் கருப் பொருளாகக் கொண்டு கவிஞர்கள் பாடிய பாடல்கள் எண்ணிலடங்காதவை.

'அன்பிற்குக் கால எல்லையோ? வயதெல்லையோ கிடையாது., இத்தகைய பெருமைகள் வாய்ந்த அன்பை. நாம் வேறுபாடுக்கு அப்பாற்பட்ட கண்ணோட்டத்துடன் வளர்ப்பதனால் மட்டுமே. உலகின் அழிவை சிறிது காலமேனும் பின்போடலாம்.

அதை மறந்து அன்புக்கு அணைபோடுவதனாலேயோ, அன்புக்கு விலை நிர்ணயிப்பதனாலேயோ? கண்மூடித்தனமான சிந்தனைகளுடன் அன்பை அடிமைப்படுத்த முயற்சிப்பதனாலேயோ? உலகின் அழிவை உறுதிப்படுத்தத்தான் முடியுமேயன்றி எதையும் சாதித்து விடமுடியாது.

அன்பால் சாதிக்க முடியாதவற்றை அதிகாரத்தால் ஒருபோதும் சாதிக்க முடியாது. என்பது. இன்று பல சம்பவங்களினூடாக நாம் கண்கூடாகக் கண்டுவரும் உண்மை.

அன்பே நீதி தேவதையின் ஜீவநாடி. இவற்றை ஏற்று நடத்துவதும், உதாசீனப்படுத்துவதும் அவரவர் மன உணர்வுகளின் பிரதி பலிப்பேயன்றி வேறெதுவும் இல்லை.

வஞ்சக இதயங்களின் வளர்ச்சி. உண்மையான அன்பைக் குழிதோண்டிப் புதைத்து விடலாம் ஆனால் அதன் வரலாறுகளை ஒருபோதும் சாகடித்து விடமுடியாது.

உண்மையான அன்பிற்கும் பாசத்திற்கும் மதிப்பளிக்காத சமூகமே! பகட்டுகளிலும் போலிவேசங்களிலும், வெளித்தோற்ற மாயைகளிலும் மூழ்கிவிடுகின்றது.

அவ்வாறான சமூகம் மறுசீரமைக்கப் படுவதும், தன்னை மீளாய்வு செய்வதும் தனிமனித சிந்தனைகளின் ஒருமைப்பாட்டிலிருந்து தான் உதிக்க முடியுமேயன்றி வேறுவழிகளில் இயலாததாகும்.

## நீதியின் அடிப்படையில் பண்பிற்கோர் உதாரணம்

உலக வாழ்க்கையினுள் ஒரு மனிதனுடைய சிந்தனைகள். பல திசைகளில் சென்றாலும். தனது தேவைகளுக்கு முதலிடம் என்ற வட்டத்தினுள்ளேயே அவ்வெண்ணங்கள் பெரும்பாலும் சுழன்றுவரும்.

இதன்படி! தனது தேவைகள் என்ற பலவற்றினுள்ளும்: இருப்பிடத் (ஆறுதல்) திருப்தியே ஒவ்வொருவருடைய வாழ்விலும் அதிமுக்கிய இடத்தைப் பெறுகின்றது.

இவ்வழியில் தனதென! தனது ஆளுமைக்கு உட்பட்ட ஓர் இருக்கையில் அமர்ந்திருக்கும் ஒருவரை! அறிமுகமற்ற பிறரொருவர் தேடிச் சென்று அணுகும்போது. இவர் யார்? என்ன?

என்ற விபரங்களைப் புரிந்துகொள்ளுமுன்பே! தனது இருக்கையை விட்டெழுந்து. வந்தவருக்கு அவ்விடத்தை வழங்கி உபசரிப்பதே உயர்பண்பின் பிறப்பிடம் என்பது பார்புகழும் ஆன்றோர் வாக்கு.

ஆனால் இதில் வெளிவேஷத்திற்கு அப்பாற்பட்ட உண்மை இருக்க வேண்டு மென்பது. அனுபவ ரீதியான தத்துவ மேதைகளின் கூற்று.

பல விதமான வேறுபாடுகளையுடைய மனித சமூகங்களிடையே புரிந்துணர்வையும் ஒற்றுமையையும் வலுப்படுத்தும் நல்வழி இதுவே என்பது நீதியின் குரல்.

## கல்வி — செல்வம் — வீரம்

**உண்மையான கல்வி :**

சிந்தனைகளை ஒரே துறையில் ஈடுபடுத்தி. ஏட்டில்மட்டும் கவனம் செலுத்திக் கற்பது நடைமுறைக்கல்வி;

குறிப்பிட்ட ஏடுகளுக்கு அப்பால்; குடும்ப வாழ்வின் சுமைகளைத் தாங்கி. கூடிப்பழகும் நண்பர்கள், உறவினர்களின் வாழ்க்கை நடைமுறைகளை அவதானித்து! இன்பத்திலும், துன்பத்திலும் இடையூறுகளின் மத்தியிலும் பெறும் அனுபவங்களே உண்மையான சிறந்த கல்வி.

**உண்மையான வீரம் :**

ஆசாபாங்குகளுக்கு உட்பட்ட மனித வாழ்வில். சுகபோகங்களுக்கு உட்பட்ட, படாடோப வாழ்வைத் தருவதற்கு ஈடாக! பணமானது மனிதனது நற்குணங்களை வற்புறுத்திக் கேட்கும்;

இப்பணத்தின் மாய வலையினுள் சிக்காது, ஆசாபாசங்களை கட்டுப்படுத்தி, அநீதிகளுக்கு அடிப்பணியாது, வாழ்வதே உண்மையான வீரம். ( உடல் பலத்தால் மட்டும் சாதிப்பதல்ல வீரம், பகுத்தறிவின் துணையால் பராமரிக்கப்படுவதே பண்பான வீரமாகும்.)

**உண்மையான செல்வம் :**

இனம், மதம், மொழி, நிறம், போன்ற பேதங்கள் மலிந்த உலகில்; பிறருடைய தவறுகளையும் பொறுமையுடன் ஏற்று.

மனித மன உணர்வுகளுக்கு மதிப்பளித்து, சமூகநீதியான ஏற்றத் தாழ்வுகளுக்கு அப்பால், பெரும்பாலான மனிதர்களைச் சம்பாதித்துக் கொள்வதே உண்மையான செல்வம். (நிலையற்ற பொருளாதாரமல்ல செல்வம்.)

## பார்வையில் சாந்தமும் பண்பான அணுகுமுறையும்

மனிதனின் அன்றாட வாழ்க்கையினுள். பார்வையும், அணுகுமுறைகளுமே மிக இன்றியமையாததாகவும், அதிமுக்கிய நிகழ்வாகவும் கருதப்படுகிறது.

பார்வைகள் பலவகை, அணுகுமுறைகளும், அவ்விதமே பார்வைகளுக்கும், அணுகுமுறைகளுக்கும் ஏற்றவாறே! ஒரு மனிதனுக்குஅன்றாடம் நன்மை, தீமைகள் கிடைக்கப் பெறுகின்றன.

கனிவைப் பிரதிபலித்து, அன்பை வெளிப்படுத்தும். சாந்தமான பார்வைகளும், கௌரவத்தை வழங்கி. பண்பைப் பேணிப் பாதுகாக்கும் வகையிலான பணிவான அணுகுமுறைகளும். மனித வாழ்க்கையினுள் தோன்றும் பெரும்பாலான பிணக்குகளையும், பிரச்சனைகளையும் குறைக்கின்றன. இங்கு கிடைக்கப் பெறுவது கூடுதலாக நன்மைகளேயாகும்,

அதே சமயம் வெறுப்பைப் பிரதிபலித்து, கடுமையான தோற்றத்தை வெளிப்படுத்தும் புரிந்துணர்வற்ற பார்வைகளும், பொருளதார ஏற்றத் தாழ்வுகளால் தோன்றிய வர்க்க பேதங்களை வெளிப்படுத்தும் அணுகுமுறைகளும், தான்தோன்றித்தனமாக ஆணவப் போக்குடன் கடைப்பிடிக்கப்படும் அணுகுமுறைகளும், மனித குலத்தின் நல் வாழ்வுக்கு என்றுமே பயன்படாது. மாறாக! சமூகத்தின் மத்தியில் பல பிரச்சனைகளையும், குற்றச் சம்பவங்களையும் உருவாக்கவே பெரிதும் பயன்படும்;

எனவே ஒவ்வொரு மனிதரிடமும், பார்வையில் சாந்தமும், பண்பான அணுகுமுறைகளும் தென்படவேண்டியது. மிக, மிக அவசியமானதும்,தவறுது மேற்கொள்ளப்படவேண்டியதுமாகும்.

# மனித குலத்தையும், அனைத்து ஜீவராசிகளையும் ஆட்டிப்படைக்கும் நன்மை-தீமை என்ற இரு வேறு சக்திகள்

உலகம் தோன்றிய காலத்தையோ, உயிரினங்கள் உருவாவாகிய காலத்தையோ நாமறியோம்.

அதேசமயம்! மதங்களின் சான்றுகளும், வரலாற்றுச் சுவடிகளும், தொல்பொருள் ஆய்வுகளும், விஞ்ஞானக் கண்டுபிடிப்புகளும் ஒன்றுக்கொன்று முரண்பட்ட தகவல்களைத்தான் தெரிவிக்கின்றனவேயன்றி தெளிவான எந்த ஒரு முடிவையுமே எமக்குக் கூறவில்லை.

ஆனால்! பிறகோள்கள் உட்பட உலகின் இயங்குதல்களையும், மனிதகுலத்தின் பலதரப்பட்ட வாழ்க்கை நடைமுறைகளையும் உற்று நோக்கி ஆராய்ந்து பார்க்கும் போது! நன்மை, தீமை என்ற இரு வேறு முரண்பட்ட சக்திகள்; மனிதனுடைய அன்றாடநடைமுறை வாழ்க்கையினுள் குறுக்கிடுவதையும். அதன் பயனாக இன்பம், துன்பம், என்ற இருவகைப் பலாபலன்களை மனிதன் அனுபவிப்பதையும் கண்டு கொள்ளலாம்.

இவ் இரு சக்திகளும். மனிதனது இதயத்தையும், அவ் இதயத்தில் தோன்றும் எண்ணங்களையும், அவ் எண்ணங்களை வகுத்தறிந்துநடைமுறைப்படுத்தும் அறிவையும் ( மூளையையும் ) சுவீகரித்தள்ளன.

ஆகையாலேயே! எதையும் எண்ணி எப்படியும் வாழலாம். என்ற சுதந்திரம் மனிதனுக்கு வழங்கப் பட்டுள்ளது.

அதேவேளை இன்னொருவருடைய சிந்தனைகளுக்கோ, வாழ்க்கைக்கோ இடையூறு விளைவிக்காத வகையில்! மனிதாபிமானத்தைப் பேணிப் பாதுகாக்கும் தன்மைகளுடன் மனிதன் தன்னுடைய அறிவை ( மூளையை )க் கொண்டு செலுத்த வேண்டுமென உலகமாயைகளைப் புரிந்து கொண்ட ஆன்றோர்களும், சான்றோர்களும்வலியுறுத்தி! இதற்கெனப் பல நற்பாதை ஏடுகளை வகுத்து வைத்துள்ளார்கள்.

மேற்படி இவ் இரு சக்திகளின் செயற்பாடுகளுக்கும் ஏது வாகவே உலகினுள்! எண்ணிலடங்காத ஐஸ்வரியங்களும், இயற்கைச் சொத்துடமைகளும், இவற்றைக் கண்டடைய அறி வில் (மூளையில்) சிந்தனு சக்தியும் ஏற்படுத்தப்பட்டன.

கூடவே மனித மனங்களில்; சபலம், சலனம் ஆசை, மோகம், பேதலிக்கும் தன்மை, ஏக்கம், பலவீனம், என்பனவும் தோற்று விக்கப்பட்டன.

இதில் குற்றச் செயல்களை நோக்கி (தீமையை நோக்கி) மனிதர்களை இட்டுச் செல்தல் முதல். பாவப் படுகுழியில் அமிழ்த்தி அழித்து விடுதல் வரை நீடித்த நிரந்தரப் பங்காற் றுவது ஆசையேயாகும்.

அதிலும்! பதவி ஆசையால் விளைந்த பல கறைபடிந்த சரித்திரங்கள். இன்னும் உலக வரலாற்றை தொடர்ந்து வரு கின்றது.

இதே போன்று பொன் ஆசை, மண்ணுசையால் நிகழ்ந்த பல துயர்நிறைந்த சரித்திரங்களும் உலக வரலாற்றினுள் புதைந்து கிடக்கின்றன.

அதேசமயம்! மனிதத்தன்மைக்கு மதிப்பளித்தமை உட்பட உலக மாயையின் அவசியத்தை நாடத்தூண்டும் சகல ஆசை களையும் துறந்து வாழ்ந்து மறைந்த உத்தமர்களினது சரித்தி ரங்கள் இன்றும் உலகம் போற்றும் ஏடாகவே பேணிப்பாது காக்கப்படுகின்றன. அவ்வாறுனவை எண்ணிக்கையில் உலகில் (உலகின் காலத்தினுள்) மிக, மிகக் குறைவானவையே.

இவ்வாறு நற்பாதை ஏடுகளையும், கறைபடிந்த வரலாறுக ளையும் உலகு காணவேண்டிய அவசியம் என்ன என்ற கேள் விக்கு எவ்வாறு விடையளிக்க முடியாதுள்ளதோ! உயிரின் பின்னணி என்ன? என்ற கேள்வியும் அவ்வாறுனதே.

உயர்ந்த கோபுரத்தினுள் பிறந்து செல்வச் செழிப்பில் மிதப் பவரோ, கூரை வீட்டின் கோடியில் பிறந்து ஏழ்மையில் தவிப் பவரோ எவராயினும் சரி இவ் இரு சக்திகளின் வல்லமை மிகுந்த சுழற்சியினுள் சிக்கித் தவித்துச் சீரழிபவரே.

என்றே ஒரு நாள் அனைவரும் உயிரை இழப்பவரே.

- ஆட்சி செலுத்துபவன் அரசை இழப்பதும்; பிச்சை எடுப்பவன் ஆட்சி பீடத்தில் அமர்வதும்.

- ஜீவாகருண்யத்தைப் போதிக்கும் துறவி உயிர்க்கொலை புரிவதும்; உயிர்க்கொலை புரிபவன் ஜீவகாருண்யத்தைப் போதிக்கும் துறவியாவதும்.

- உயிர் நட்பென உரைக்கும் இருவர் கடும் விரோதியாவதும்! பெரும் பகையாளிகள் இருவர் உயிர் நட்புக் கொள்வதும்.

- மமதை கொண்டு மார்தட்டுபவன் மண்கவ்வி மடிவதும்; மண்ணுக்கு மதிப்பளிப்பவன் மாவீரன் எனத் திகழ்வதும்.

- அடிமைப்படுத்த நினைப்பவன் அன்புக்காக ஏங்கித் தவிப்பதும்? அன்பிலூறித் திளைத்தவன் உள்ளங்களை ஆட்கொண்டு வாழ்வதும்.

- ஆசைகளுக்கு அடிமையானவன் துன்பங்களை வளர்த்துக் கொள்வதும்! ஆசைகளைத் துறந்தவன் யோநிலையில் ஞானம் பெறுவதும்.

- ஏய்த்து, ஏமாற்றி வாழ்பவன். மதிப்பிளந்து மனம், வெதும்புவதும்! வறுமையிலும் பொறுமை கொண்டவன் வரலாறு படைப்பதும்;

- தன்னை மறந்தவன் பிறரால் அவமதிக்கப்படுவதும் தன்னிலை உணர்ந்தவன் பெருநிலை அடைவதும்.

- தருமத்தை மறந்தவன் தரங்கெட்டு அலைந்து அழிவதும் பகிர்ந்துண்ணப் பழகியவன். பரம்பொருளைக் கண்டடைவதும்.

நன்மை, தீமை என்ற இவ்விரு சக்திகளின் செயற்பாட்டுச் சுழற்சியேயாகும்.

மனிதன் மனிதனை உணர்ந்து; இயற்கையின் சக்திகளுக்கு மதிப்பளித்து வாழும்போது நன்மை என்ற சக்தியால் ஆளப்படுகிறான். இங்கு இயற்கைகள் அவனுக்கு அனுகூலமான உதவிகளையே புரிகின்றது; உலகம் வளம்பெறத் தனது பங்களிப்பைச் செலுத்துகிறது.

மனிதன் மனிதனை உணரத்தவறி. பணத்தைக் கடவுளென. வணங்கி. இயற்கையின் சக்திகளுக்கு மதிப்பளிக்கத் தவறும் போது! அதன் தீமையால் வழி நடத்தப்படுகின்றான். அப்போது பருவகாலங்கள் தவறி இயற்கையின் சக்திகள் கோரத் தாண்டவமாட முற்படுகின்றன. இங்கு மொத்த அழிவை ஏற்படுத்தும் முயற்சியிலேயே இயற்கை தனது பங்களிப்பைச் செலுத்துகின்றது.

மனித உடல், எண்ணங்களைத் தோற்றுவிக்கும் இதயம், நல்வழிக்காக வாதாடும் அந்தராத்மா (மனச்சாட்சி) நன்மை தீமைகளை வகுத்துணர்ந்தும் பகுத்தறிவு, செயற்படுத்தும் சகல அங்கங்கள் அனைத்தும் நற்சக்தியினது (இறைவனது) ஆழ்ந்த நோக்கின் கண்டு பிடிப்பும், அற்புதச் சிருஷ்டிப்புமாகும்.

மனிதன் இவற்றை உணர்கின்றானா? உலகம் நிலைத்துவாழ விரும்புகின்றானா?

நான் சாதிப்பேன் என எண்ணி மார்தட்டும் மனிதன். நான் இறந்து விட்டால் என எண்ணிப்பார்ப்பானேயானால்! அவன் 'ஞானத்தின்' நுழைவாயிலைக் காண்கின்றான்.

வேதனையிலும் துன்பதுயரங்களிலும் உழன்று மடிய வேண்டியதுதான் மனிதகுலத்தின் விதியா? என எண்ணி பிறருக்காக உருகும்போது! அவன் ஞானக்கோயிலின் மண்டபத்தினுள் நுழைகின்றான்.

தனது தேவைகளுக்கு மேலதிகமானவற்றைக் கொண்டு, பசியின் கொடுமையால் துவண்டு விட்டவர்களைத் தூக்கிவிடும் போது; அவன் ஞானத்தின் மூலஸ்தானத்தினுள்ளேயே பிரவேசிக்கின்றான்.

வாழவழியில்லாதோர்க்கு நல்லதோர் பாதைகாட்டி, தன்னைப் பகைத்தவர்களை மன்னித்து அவர்களுக்கும் அன்புகாட்டும் போது! அவன் ஞானத்தின் கற்பகக் கிருஹத்தினுள்ளேயே சங்கமமாகின்றான்.

இப்பேற்பட்டவர்களால் வழங்கப்பட்டவையே நற்பாதை ஏடுகளாகும்.

அதேசமயம் இல்லாதவர்களை மேலும் இழக்க வைத்து, வறியவர்களை மேலும் வாட்டிவதைத்து உள்ளவர்களைக் காணுது என எண்ணத் தூண்டி, அதனுல் இன்னெருவருடைய சுகத்தைப் பறித்து அழித்து அவரது சொத்துகளைத் திருடவைத்து;

பகட்டுப் - படாடோபம் என்பவற்றைக் காட்டி ஏக்கங் கொள்ளத் தூண்டிக் குற்றம் புரியவைத்து கணக்கில்லாத தேவைகளைப் பூர்த்தி செய்து வாழ்பவனுக்கு அழகான பெண் உடல்களைக்காட்டி உடல் இச்சைகளைக் கிளறி பாவம், புண்ணியம் என்றெல்லாம் ஒன்றும்மில்லை என்ற எண்ணத்தை உதயமாக்குவதன் மூலம் அவனிடம் அசட்டுத் தைரியத்தை ஏற்படுத்தி அழைத்துச் சென்று பாவப்படுகுழியினுள் அமிழ்த்தி அழித்து விடுவதே தீயசக்தியின் லீலைகளாகும்;

நன்மையோ தீயசக்தியின் வாதாட்டத்திற்காக! மனிதனுக்கு கல்லிலும், முள்ளிலும் இடறும்படியான சோதனை மிகுந்த வாழ்வையே கூடுதலான காலங்களுக்குக் கொடுக்கிறது;

தீயசக்தியோ பிறரைப்பற்றிச் சிந்திக்காத சுயநலவாத சுயலாப சிந்தனைகளுடன் சுகபோக வாழ்வையே கூடுதலான காலங்களுக்குக் கொடுக்கிறது.

இவ்விரு எதிர்மறைநிகழ்வுகளால்! உடலே உலகவாழ்க்கை என எண்ணும் பெரும்பாலான மனிதர்கள். தவறுகளையும் பாவச் செயல்களையும் தமது இயற்கையான நடைமுறை எனக் கொண்டுள்ளார்கள்.

அதேசமயம்! மனிதன் இதிலிருந்து விடுபட முடியாது என்று எதுவுமே கிடையாது.

மனநிலை உணர்வுகளை கட்டுப்படுத்தி நல்வழிகளை மீண்டும், மீண்டும் அசை போடுவதன் மூலம் தீயசக்தியின் லீலைகளை திசை தெரியாது ஓடவைக்க முடியும்.

இதற்குத் தூய சிந்தனைகளுடன் முழுமுயற்சி வேண்டும்.

# பசி எனும் உணர்வுகள் இருவகை

மனிதனின் ஜீவாதார வாழ்விற்கு அடிப்படைக்காரணிக ளாக! உலகில் முதன்மை பெற்று விளங்கும் உணவு, தண்ணீர், காற்று என்பனவற்றுள் காற்றே முதலாவதாகப் பயன்படுகின் றது.

சில நாட்களுக்கு மனிதன் உணவின்றித் தண்ணீரை மட் டும் உட்கொண்டு வாழமுடியும். சில சமயங்களில் தண்ணீர் இன்றியும் ஓரிரு நாட்கள் உயிர்வாழ முடியும். ஆனல்! சுவா சிக்கும் வாய்ப்பின்றி (காற்றின்றி) மனிதன் சில நிமிடங்க ளுக்கு மேல் உயிர்வாழமுடியாது.

அதே சமயம் காற்றும்! மழையும் (நீரும்) மனிதனுக்கு இலவசமாகக் கிடைப்பதனுலும்! உணவானது பணத்தின் மூலமோ, அன்றி உடலுழைப்பின் மூலமோ கிடைக்கப் பெறு வதனல். பொது நோக்கில்! உணவே வெகு பிரதானமாகக் கரு தப்படுகிறது.

பஞ்சம், வறுமை, பிணி, ஏழ்மை, பசி என்ற துயரங்கள் நிறைந்த மக்கள் கூட்டத்தினரிடையே இருந்து எழும் அவல ஒலத்தின் கருவாக! "உணவே" உலகின் முன் தென்படுகின் றது.

வயிற்றினுள் பாதி இடத்தைப் பிடித்திருக்கும் குடல்களை! ஏதோ ஒன்று பிய்த்துப் பிடுங்குவதை மனிதனுக்கு உணர்த் தும் "பசி" எனும் உணர்வைப் பூரணமாகத் திருப்திப்படுத் தும் திறமை உணர்வுக்கு மட்டும உலகில் உண்டு.

பசிவந்தால் பத்தும் பறந்திடும் என்ற பழமொழியை! நாம் உளவியல் ரீதியாக ஆராய்ந்து பார்த்தோமேயானுல்! அன் ருடம் மனிதனிடம் தோன்றும் பல்வேறுவகையான பல உணர் வுகளிலும், பசியே முதன்மை பெற்றுத் திகழ்வதைக் கண்டு கொள்ள முடியும்.

இடம், பொருள், தன்னிலே, சுற்றுடல், தவறு, தவறு குற் றம், செய்யத்தகாதவை என இன்னும் பல அம்சங்களை' பசி" எனும் உணர்வு மறந்து மீறிவிடுகின்றது.

இவ்வாறான பசி எனும் உணர்விலும் இருவகை உண்டு:

(i) உணவுக் கஸ்டம் இல்லாத ஒருவரை நாம் அணுகி பசியின் கொடுமையான உணர்வுகளைப்பற்றி உங்களுக்குத் தெரியுமா? என்று கேட்டால்! அவர்! ஏன் தெரியாது? நாமும் வேலைவெட்டி என நேரமற்றிருக்கும் எத்தனையோ சமயங்களில் பசியால் துடித்திருக்கின்றோம். எனவே பசி என்பது இன்னது என்றும், அதன் உணர்வுகள் இது தான் என்றும், நாமறிவோம். இதைப் பொறுத்துக்கொள்ள முடியாது என்று யார் சொன்னது? என அவர் பதில் கூறுவதோடு கேள்விகளும் கேட்கலாம்;

அவர் கூறியது தர்க்க ரீதியில் பொருந்துமாயினும்; உளவியல் ரீதியில் பசியின் கொடுமையான உணர்வுகளை பூரணமாக அவர் அறிந்திருக்கவில்லை என்பதே உண்மையாகும்.

வீட்டில் எந்நேரமும் உணவு தயாராக இருக்கும் ஒருவருக்கு! வேலை, நேரமின்மை என்பன காரணமாக பசி உணர்வு ஏற்படுவது இயற்கையே. இருப்பினும் வீட்டில் உணவு இருக்கின்றது தானே இன்னும் சிறிது நேரத்தில் சாப்பிடலாம் தானே என்ற சாத்தியப்படும் மனநிலைநம்பிக்கை; அவரிடம் தானாகவே பொறுமை உணர் ஏற்பட வழிவகுக்கின்றது.

எனவே தாக்கங்கள் மிகக் குறைந்த சாதாரணப் ''பசி'' என்றே இது கருதப்படவேண்டும்.

(ii) அதே சமயம் பல காலம் தொடரும் வறுமையினால்; ஒருவேளை உணவுக்கு என்ன செய்வோம் என்ற ஏழ்மை நிலையில் தவிக்கும் ஒருவரிடம் இப் பசி உணர்வு ஏற்படும் போது! என்ன செய்வது? எப்படிப் பசி ஆறுவது? என எண்ணும் வெறுமை சூழ்ந்த நினைவுகளே உண்மையில் கொடுமையான உணர்வுகளாகும்.

கொடுமையான இவ் உணர்வுணர்வுகளைச் சாதாரண உணர்வுகளால், ஒருபோதும் புரிந்துகொள்ள முடியாது.

''பசிவந்தால் பத்தும் பறந்திடும்'' என்ற பழமொழி மேற்படி கொடுமையான உணர்வுகளை அனுபவரீதியாக அறிந்தவர்களாலேயே கூறப்பட்டிருக்கவேண்டும்.

ஏனெனில்! மேற்படி பசி உணர்வு தோன்றியவர்களிடம். ''பொறுமை' எனப்படுவது பெரும்பாலும் அழைத்தாலும் வராததாகவே இருக்கும்.

# நீதியின் சிந்தனைகள்

(1) சபலம் சலனம், தவறு, பலவீனம் ஆசை, ஏக்கம், மோகம், விரக்தி, குற்றம் போன்ற தீமையின் கிளைகள் மேலோங்கும் இதயத்தில் கொடூர சிந்தனைகளே ஆணிவேராகும்.

(2) தனது நிலைக்கு அப்பாற்பட்ட கிடைக்க முடியாத தேவைகளின் மீது ஏற்படும் ஆசையே! குற்றச் சம்பவங்களை நோக்கி மனிதர்களை இட்டுச் செல்லும் பலவழிப் பாதையாகும். அதேசமயம், பொறுமையைக் கடைப்பிடித்து குற்றங்களினின்று தவறுபவர்கள் சோகச் சுழற்சியில் சிக்கித் தவிக்க நேரிடுகிறது.

(3) தேவைகளை அளவில்லாமல் கேட்டுக் கொண்டே இருக்கும் கீழ்த்தர இச்சைகளில் மயங்கும் உடலுக்கு மதிப்பளிப்பவர்கள். சக உடல்களினுள்: குடிகொண்டிருக்கும் உயிர்களை எண்ணிப் பார்க்கத் தவறிவிடுகின்றனர்;

(4) ஒருவரது அந்தரங்க சிந்தனைகளை எவ்வாறு அறிய முடியாதுள்ளதோ! அவ்வாறனதே உயிரினது பின்னணியுமாகும்.

(5) மனித சமூகம் வெளியில் பேசும் வார்த்தைகளும், அந்தரங்க சிந்தனைகளும் ஒன்றாக அமையும் நாள் என்று உருவாகுமோ அன்று உயிரினது பின்னணியும் யாரேனும் ஒருவரால் அறியக்கூடியதாக இருக்கும். ஆனால் மனித அறிவால் அடக்கி ஆள முடியாத ஓர் மாபெரும் வல்லமை பொருந்திய சக்தியிடம். அதன் கரு அடங்கி இருப்பதையும் மனிதன் கண்டு கொள்வான்;

(6) நான், நான் என எண்ணும் முன்னோடிகள் (அரசபீடத்தினர்) எனக்கு மேலானது இயற்கையின் சக்திகள் என எண்ணுவார்களேயானால்? உலகம் ஓரளவு அமைதியடைய வாய்ப்புண்டாகும்;

(7) விஸ்பரூபம் எடுத்துப் பெருகியிருக்கும்; விஞ்ஞான அழிவு கருவிகள். குறுகிய அறிவுள்ள வறட்டுக் கௌரவவாதிகளால் சிந்தனையற்ற முறையில் பயன்படுத்தப்படுமேயானால்,

உயிரினங்கள் அற்ற பிறகோள்களைப் (கிரகங்களைப்) போன்று உலகமும் மாறுவது எவராலும் தவிர்க்கவோ? தடுக்கவோ? முடியாத இயற்கையின் விபரீத விளைவாகவே இருக்கும்;

(8) அன்பிலூறித் தளைத்து வளர்ந்த விருட்சமே (பிரபல்யமே) உலகம் உள்ள வரையில் நிலைத்து வாழும்; அதைவிட்டு அதிகார ரீதியில் தேடும் பிரபல்யங்கள் அவரது மறைவுடன் அழிந்துவிடுவது மட்டுமல்ல மக்கள் மனங்களை விட்டு மறந்தும்போகும்.

(9) அழகுள்ள இடத்தில் அறிவிருப்பதில்லை. அறிவிருக்கும் இடத்தில் பணம் இருப்பதில்லை, பணம் புரளும் இடத்தில் குணம் அமைவதில்லை, அனைத்தும் ஒருங்கே அமையப் பெற்றவருக்கு வாழ்க்கை நிலைப்பதில்லை.

(10) நியாயமான ஆசைகள், மனிதனை நிர்க்கதியில் இருந்து பாதுகாப்பான பணிவுள்ள வாழ்க்கை மனிதனுக்குப் பகைவரைத் தோற்றுவிப்பதில்லை, சபலமற்ற மனம் மனிதனுக்குச் சஞ்சலங்களைக் கொடுப்பதில்லை நிறையுள்ள (போதுமென்ற) மனம் மனிதனுக்கு நின்மதியை வழங்குகின்றது.

(11) துன்பத்தின் சுமைகளை இறக்கிவைக்கத் தெரியாதவன் (அறிவற்றவன்) பிறரது ஆலோசனையை நாடுவது தவிர்க்க முடியாது இடம்பெறும் நிகழ்வு; இதில் சுயலாப நோக்குடையவர்களிடம் பெறும் ஆலோசனைகளே. ஒருவனது வாழ்க்கைப் பாதைகளை மாற்றியமைக்கின்றது.

(12) வறுமையின் கோரப் பிடியுள் சிக்கித் தவிக்கும் பெரும்பாலானோர், பொறுமையை இழந்து விடுகின்றனர்; இதனால் அவர்கள் நெறிகெட்டு அலைந்து பொறுப்பற்ற வாழ்வு வாழ்வது, தவிர்க்க முடியாத மிகவும் துர்அதிர்ஷ்ட வசமானதோர் வாழ்வாகவே உலகில் தென்படுகிறது;

(13) இரு உள்ளங்களை வியாபிக்கும் அன்புக்கு அணைபோடும் ஓர் சம்பிரதாயம் இருக்குமேயானால்! நிட்சயமாக அது முன்னோர்களில் சுயநலவாதிகளால் வகுக்கப்பட்டதே;

(14) ஓர் இல்லற வாழ்வு உதயமாகவும், அதன் வழி ஓர் சந்ததி உருவாகவும் மூலதனமாக அமைவது ஆண், பெண்

ளானது அன்பே என்பது உண்மையானால்! உலகம் இடை விடாது சுழன்று கொண்டிருக்க இறைவன் மனிதகுலத்தின் மீது கொண்ட அன்பே காரணமாகும்.

(15) சாதாரண பாமர மக்கள் கண்டும். கேட்டும் வியப்புறும் விஞ்ஞானத்தின் உருவங்களைக் கண்டு பிடித்தது மனிதனின் அறிவுதான் என்பது உண்மையானால்! உருண்டு கொண் டேயிருக்கும் உலகம் உட்பட அனைத்துக் கோள்களையும் (கிரகங்களையும்) கற்பனைக் கண் கொண்டு சிருஷ்டித்தது அறிவின் சிகரமாகிய இறைவன் ஒருவரே என்பதும் உண் மையோ.

(16) ஒரு சில மணிநேரங்களில் உலகை அழித்து விடும், சக்தி கள் அடங்கிய பாரிய அணுக்குண்டுகளை 20ம் நூற்றாண் டின். தலைசிறந்த விஞ்ஞானிகள் கண்டுபிடித்து உருவாக் கியிருக்கின்றார்கள் என்றால் உலகை உருவாக்கி இந்த விஞ் ஞானிகளையெல்லாம் இங்கு உலவவிட்ட மாபெரும் வல் லமை பொருந்திய விஞ்ஞானியும் (இறைவனும்)எங்கோ ஓர் கோளில் நிட்சயம் உண்டு.

(17) ஒரு சில கோள்களைக் கண்டடையும் சாதனங்களை (ராக் கெட்களை) உருவாக்கியது பிரபல்யத்தை விரும்பும் மனித அறிவானால். அனைத்துக் கோள்களையும் உருவாக்கி வலம் வந்து பராமரிக்கும் பிரபல்யத்தை விரும்பாத மாட்சிமை தங்கிய சக்தி அறிவே இறைவனாகும்.

(18) நம்பிக்கையின் அடிப்படையே வாழ்க்கையானால்; நம்பிக் கையில் பதிந்த உருவமே இறைவனாகும். அவையே பல மதங்களினாலும் வழிபடப்படும் பல கடவுள்களாகும்.

(19) கொடூரங்களுக்கு அஞ்சாத இதயம், உயிராபத்தில் அஞ் சும்போதே இறைவன் மனிதர்களுக்காகப் பரிதாபப்படுகின் றார்; ஏனெனில் இவன் நல்வழியைப் பின்பற்றி வாழ்ந்திருக் கக்கூடாதா? என்று;

(20) பசித்த ஓர் ஏழையின் பசியைப் போக்க முடியாத பெரும் பெறுமதிமிக்க வைரம், பாதுகாப்புகளுக்கு மத்தியில் உறங் கிக்கொண்டிருப்பது. விந்தைக்குரியது மட்டுமல்ல, மனித குலம் வெட்கித் தலைகுனியுமளவுக்கு வேதனைக்குரியதுமாகும்

(21) ஒருவரால் அருமை எனப்போற்றி வந்த ஒன்றின் மீது ஏற்படும் வெறுப்பு நிலை அதன் பெருமைகளையே உண ரத் தவறிவிடுகின்றது.

(22) "பசி" என்ற கொடுமையான உணர்வுகளுடன் அலைந் தவன், வயிறூறி மேலதிகமாகப் பணத்தையும் கண்டவு டன், தன்னைப் போன்ற நிலையில் உள்ளவனது உணர்வுகளை மதிக்கத்தவறி மறந்து விடுகின்றான், இதனாலேயே உலகம் அமைதியிழக்கக் காரணமான பணக்காரன், ஏழை என்ற இருவேறு முரண்பட்ட வர்க்கபேதங்கள், மனித இனத் தைத் தொடர்ந்து பின்பற்றி வதைத்து வருகின்றது;

(23) மனநிலை உணர்வுகள் பாதிக்கப்படும் போது உடல்கள் துவண்டு விடுகின்றன, அந்த மனநிலை உணர்வுகளே உயி ரினது அந்தரங்கஓலமும் உடல்களது இயக்கமுமாகும்.

(24) ஈனத்தனத்தில் ஊறிய மனிதன் தனது நடவடிக்கைகளை பெருந்தன்மை நிரம்பிய செயல் என எண்ணி அதற்கு நியாயமும் கற்பிக்கும்போது அதனுள் பல அப்பாவிகள் துன்பமடைய நேரிடுகிறது.

(25) இன்பம் தேட முயலும் (அலைந்து திரியும்) மனித உடல், அதற்காக நீதி நெறிகளை உதாசீனப்படுத்துவதில் மூழ்கி விடும்போது, இயற்கை பொய்ப்பதோடு மொத்த அழிவு களையும் ஏற்படுத்துகின்றது.

(26) இளமையும், முதுமையும் இரு துருவங்களாக ஓர் உடலி னுள் இருப்பதைப்போன்றே! நன்மை, தீமை என்ற இரு வேறு முரண்பட்ட சக்திகளும் அறிவைப் பகடைக் காயாக்கி மனித உடலை ஆட்டிப்படைக்கின்றன.

(27) சொற்ப காலங்கள் நிலைக்கும், இளமையைச் சாதகமா கக் கொண்டு அற்ப வாழ்வைத் தேட முயலும் மனிதன், தனது அறிவுக்குள் அடங்காத பரந்த அண்டவெளியை உற்று நோக்கிச் சிந்தித்து, பருவகாலங்கள் தவறாத இயற் கையின் சக்திகளுக்கு மதிப்பளிப்பானேயானால்! உலகம் சீரிழந்த நிலைமைக்குள்ளாயிராது.

(28) தீய சக்தியின் வாதாட்டத்தால்! வஞ்சகத்தில் ஊறிய இதயங்கள் வளமாக வாழ்வதும், பண்புள்ள இதயங்கள்

பகற்கனவு காண்பதுமே உலக வாழ்வானது. இந்நிலையை மாற்றியமைக்கும் பொறுப்பு மனிதனின் மீது நற்சக்தியால் சுமத்தப்பட்டே அவன் பூமியில் தோற்றுக்கப்படுகிறான். இவ்வாறு பூமியில் தோன்றும் பலகோடி மாந்தருள் ஒரு சிலரே உண்மையான மனித வாழ்வு வாழ்கின்றனர். ஏனையோர் குட்டையில் ஊறிய மட்டைகள் போன்ற தீயசக்தியால்சுவரப்பட்டு எண்ணிக்கையில் பெரும் பகுதியினராகிவிடுகின்றனர். இதனாலேயே, உலக வரலாற்றில் துன்ப, துயரங்களின் ஏடுகள் கூடிக்கொண்டு செல்கிறது.

(29) ஒன்றைக் காண எண்ணியவன், அதைக்கண்டபின்பு இன்னொன்றைத் தேடுகிறான். அப்படிப் பலதைக் கண்டவன். மேலும் பலதைத் தேடுகின்றான். இங்கு மனிதனது தேவைகள் பெருகிக் கொண்டே செல்கிறது, அதே சமயம் நன்னெறி ஒன்றே குறிக்கோள் எனக் கொண்டவன், தேவைகளைக் குறைத்து பற்றற்ற வாழ்வு நடத்தி இகபரம் ஒன்றை நோக்கியே தனது அறிவைக் கொண்டு செலுத்துகிறான். இத்தகைய நடைமுறைகளாலேயே உலக சுகபோகங்கள் கூடியும், இறை வழிப்பாதை குறுகியும். உலகில் பெரும் தாக்கங்களை ஏற்படுத்தி வருகின்றன, ஆனால் சுகபோகங்கள் நிலையற்றவை என்றும். இறைவழி ஒன்றே முடிவற்றது என்பதும், சரித்திரங்கள், வரலாறுகள் சான்றுபகரும் உண்மை.

(30) விஞ்ஞானத்தின் மூலம் பாரிய அழிவுகருவிகளைக் கண்டு பிடித்து அவற்றைக் கொண்டு உலகை அடக்கி ஆள நினைக்கும் மனிதன், அன்பிலூறித் திழைத்து, உலக உயிரினங்களை மனிதர்களை சுவீகரித்துவாழ முற்பட்டிருப்பானேயானால்! உலக வரலாறினுள் கறைபடிந்த பல சரித்திரங்கள், எதிர்கால சந்ததியினரின் கண்களுக்குத் தென்படாதிருந்திருக்கும்

(31) அந்தரங்கத்திலேனும் பிரபல்யத்தை விரும்பும் ஓர் தலைவனிடமிருந்து தன்னலங்களுக்கு அப்பாற்பட்ட தூய சிந்தனைகளுடன் கூடிய சமூகத் தொண்டை எதிர்பார்ப்பது மிகத் தவறானதோர் கணிப்பீடாகும்;

(32) பரந்த அறிவுபடைத்த சந்தர்ப்பவாத நோக்குடைய ஒரு செல்வந்தனை ஆதரிபபதை விட வாழ்க்கையில் எவ்வித

குறிக்கோள்களுமற்ற நூறு வறியவர்களை அரவணைப்பதே இலட்சிய வேட்கைகுகந்த சிறந்த வழியாகும்.

(33) எண்ணியவை எழுத்துருவம் பெறுவதும்! எழுத்துவடிவான கருத்துகள் பிறரால் ஏற்றுக்கொள்ளப்படுவதும்! ஏற்றுக் கொள்ளப்பட்டவை அவர்களால் கடைப்பிடிக்கப்பட்டு ஒழுகப் படுவதும்! எண்ணுபவனுடைய மனத்தெளிவையும் வாழ்க்கை முறைகளின் உண்மைகளையும் பொறுத்தே.

(34) பலம் எனப்படுவது! உடல்வலுமட்டுமல்ல, நிதானித்துச் செயல்படும் அறிவும் பலமே.

(35) இருவகைப் பேச்சுக்களில் ஒருவகை, அந்தரங்க சிந்தனைகளை (மன எழுச்சிகளை) அப்படியே வெளிப்படுத்துவது சிந்தனைகளில் தோன்றும் உண்மைகளுள் தணிக்கையை ஏற்படுத்தி! சந்தர்ப்ப சூழ்நிலைகளுக்கேற்றவாறு பேசுவது இரண்டாவது வகை.

(36) நல்ல விடயங்களை (சம்பவங்களை) நாற்பதுகோடி மாந்தருக்கு முன்பாக நாலாயிரம் தடவை உரத்த குரலில் ஓயாது கூறலாம். ஆனல்! தீய சம்பவமாயின் அதை ஒரு தடவையுடன் மறந்து விடுவதே சமூகம்கூடி வாழ்வதற்குரிய அறிவின் இலக்கனமாகும்.

(37) நாம் நமது மனதுக்கு இதமளிப்பவைகளையே கற்பனை செய்து மகிழ்கின்றோம். கவிதை வரைகின்றோம், கதைகள் புனைகின்றோம். ஆனல் அதேசமயம் முழு உலகும் துயருறப்போகும், எமது கற்பனைகளுக்கு அப்பாற்பட்ட விபரீத விளைவுகள் நிறைந்த ஆக்கங்களை விஞ்ஞானம் உருவாக்கி வருகின்றது. குறிப்பாக ஜீவன்கள் உயிர்வாழ முதல் மூல (இயற்கை) வளமாகிய காற்று இதுவரை காலமும் தான் வாழவைத்தது வந்த உயிரினங்களைக் கொல்ல வல்ல விஷக் கிருமிகளைச் சுமக்கத் தன்னைத் தயார்படுத்திக் கொள்ள வேண்டிய துர்ப்பாக்கிய நிலைக்கு விஞ்ஞானத்தால் தள்ளப் பட்டுள்ளது.

(38) என்ன வாழ்க்கையடா, என அங்கலாய்த்துப் பெருமூச் செறியும் மனிதர்கள், தங்களுடைய இதயத்தின் சிந்தனைகளையும், வாழ்க்கை நடைமுறைகளையும், ஒப்பிட்டுப்பார்க்கும் போது, சில தெளிவுகள் ஏற்படும்.

(39) மாறுத இயற்கையின் நிகழ்வுகளும், கணத்திற்குக் கணம் மாற்ற மடையும் மனிதனின் குணங்களும் எவ்வாறு பரந்த பெரும் வேறுபாடுகளைக் கொண்டுள்ளதோ? அவ்வாறுனதே பசியின் கொடுமையான உணர்வுகளும், அதைப் புரிந்து கொள்ளாத சுகவாசிகளின் இருப்புப் பெட்டிகளும்.

(40) நினைவுகளில் தூய்மை அகலும் போது, சுய தேவைகளின் பெருக்கம் அவசியமாகும்போது தான் என்ற அகத்தை இதயங்களை ஆட்கொளும்போது தேசிய நலனுக்கான பல ஆக்கங்கள் சிதைக்கப்படுகின்றன.

(41) அறிவு வளர்ச்சியின் பயனுக, விஞ்ஞானத்தால் பல உருவங்கள் தோன்றலாம். அதன் பயனுக விளைந்த நாகரீகம் மனிதனுடைய உடைகளில் பல மாற்றங்களை ஏற்படுத்தலாம் அதற்காக! மனிதனுடைய குணுதிசயங்களிலோ? நல்ல பழக்க வழக்கங்களிலோ? மாசு, மறு தோன்றவிடலாகாது.

(42) ஆற்றுமையின் வெளிப்பாடு அழுகை, தீண்டாமையின் வெளிப்பாடு வெறுப்பு இங்கு நல்ல சிந்தனைகள் மனிதனுடைய இதயத்தின் தோன்றுமை,யே குறைபாடு.

(43) இல்லற வாழ்க்கைக்கு உகந்த அழகானதோர். பெண்ணை முதல்முறை காணும்போதே, ஒவ்வொருவரிடமும், சபலம், சலனம் மோகம், ஆசை, விருப்பம், ஏக்கம் போன்ற வெவ் வேறு குணுதிசயங்கள் தோன்றக்காரணம், அவரவர் மனோ நிலையினதும் மனோவலிமையினதும் வெளிப்பாடேயாகும்.

(44) அழகுக்கு அடிமையாகும் இதயம் புகழுக்காக ஏங்கும் போது, அங்கே அந்தஸ்து (செல்வம்) மிக மிக அவசியம் எனக் கருதுகிறது.

(45) மனிதன் என்ற அந்தஸ்தின் வெளிப்பாடு அறிவே என்பது அந்த அறிவுக்கே புரியவில்லைபோலும் ஏனென்றுல் ருல் மனிதன் என்ற அந்தஸ்தை அறிவே செல்வத்தின் மீது போட்டு செல்வமே அந்தஸ்து என்று போலியாகப் பறை சாற்றுகிறது.

(46) இத்தனை ஆயிரம் ஆண்டுகளாக இறைவன் என்ருெரு மாயசக்தி இந்த பரந்த பிரபஞ்சத்தினுள் எங்கே இருக்

கின்றது? என்ற தெளிவற்ற குழப்பமான கேள்வி, அறிவியல் ரீதியான பலரிடம் இருந்து எழுவதில் ஏதோ ஒரு நியாயம் இருக்கவே செய்கின்றது.

காரணம் என்னவெனில்! இங்கு (உலகில்) வாழப் பிறந்த மனிதர்களே இறைவனைப் பற்றிப் போதித்துள்ளார்கள்: ஆனால் அதே சமயம் மேற்படி கேள்வியைக் கேட்பவர்கள் இறைவனைப்பற்றிய! சாத்தியப்படும். நேரடி நிகழ்வுகளைத் தேடுபவர்களாகவே (தேடும்மனோநிலைக்குட்பட்டவர்களாகவே) தென்படுகின்றனர்.

ஏனைய பெரும்பாலான பாமர மக்களோ? அன்றாட வாழ்க்கைப் போராட்ட நிகழ்வுகளை ஆத்ம ரீதியாக சிந்திபவர்களாதலால் அவர்கள் அன்றாடம் இறைவனைத் தேடவே செய்கின்றனர் என்பதும். பொது நோக்கில் தென்படும் வெளிப்படையான உண்மையாகும்.

(47) இளமையும் வாலிபமும் மனித வரலாறினுள் இனிமை மிகுந்த காலங்கள் என்பர், ஆனால் நானோ இனிமைகளை இளமையில் துறக்கவே நினைக்கிறேன். அதற்குரிய மாற்றமாகவே எனது தோற்றத்தை அமைத்துள்ளேன்.

(48) கீழ்த்தர ரசனைகள் மலிந்துவிட்ட இன்றைய உலகில் சோகம் உன்னதமானது மட்டுமல்ல, இதயத்தைத் தூய்மையானதாகவும், மாற்றுகிறது.

(49) ஏழைகள், அடிமட்டமக்களின் பசியால் விளையும் கொடுமையான உணர்வுகளும் உயிர்வாழ்வுக்குரிய அதிமுக்கிய உணவுத் தேவைகளும் சமூகத்தின் உயர்மட்ட செல்வந்தப் பிரபுக்களால் ஆத்மரீதியாக என்றைக்கு மதிக்கப்படுகின்றதோ? அன்றுதான் உலகின் பாரிய அழிவுகள், இயற்கையின் சக்திகளால் நிறுத்தப்படும்;

(50) உண்மையும், பொய்யும், ஒன்றுக்கொன்று முரண்பட்டவையாயினும், விட்டுக் கொடுக்கும் மனப்பான்மையுடையன எவ்வாறெனில் உண்மையை மறைத்துப் பொய் சொல்லும் போது, உண்மை விட்டுக் கொடுத்து ஒதுங்கிக் கொள்கிறது. திரும்ப அதே உண்மை ஆதார பூர்வமாக நிரூபிக்கப்படும்போது, உண்மைக்கு மதிப்பளித்து "பொய்" விட்டுக்கொடுத்து ஒதுங்கிக் கொள்கின்றது.

(51) மேலைநாட்டின் பண்பற்ற அதிவேக நாகரீக நடைமுறைகள் இல்லறப் பண்புகளுடன் கூடிய நடைமுறைகளைத் தழுவும் பெண்களுக்கு உதாரணமாகா.

(52) அன்பெனும் பெருவெள்ளமே பெண்களின் சுதந்திரமாகும் பரஸ்பர இதய பரிமாற்றமே உண்மையான அன்பாகும்

(53) தவறுகள் மனித இயல்பு. அவற்றை ஏற்றுக்கொண்டு திருத்தி நடப்பதனால் சமூகத்தின் மத்தியில் ஒருபடி மேலாகின்றோம். அதைவிட்டு செய்யும் தவறை மூடி மறைத்து நியாயப்படுத்த முயற்சிப்பதன் மூலம், சமூகத்தின் முன் எம்மை நாமே அவமானத்தின் சின்னமாக்கிக் கொள்கின்றோம்.

(54) ஏடுகளில் இருப்பதற்காக மட்டுமல்ல தத்துவ வாக்கியங்கள், நடைமுறைப் படுத்தப்பட வேண்டியதன் அவசியத்தை வலியுறுத்தியே அவைவழங்கப்பட்டன.

(55) இளைய தலைமுறையினர் விழிப்புடன் (அறிவுடன்) நடந்துவர (வளர்ந்துவர) பழைய தலைமுறையினர் பண்பைப் பகிர்ந்து வழங்கவேண்டியது மிக, மிக அவசியமாகின்றது.

(56) இதயத்தின் சிந்தனைகள் கீழ்த்தரமானவையாயின். ஒருவன் விழித்துக் கொண்டிருந்தாலும் அறிவால் அவன் தூங்கியவனாவான்.

(57) ஏடுகளில் கற்றறிந்த கல்வி அறிவும், பட்டுத்தெளிந்த அனுபங்களும், பரந்த அண்டவெளியைப் பற்றியும் உலகினுள் அல்லல்படும் மனிதகுல வாழ்வைப்பற்றிச் சிந்திக்கும் ஆற்றலும். ஒன்று சேரும் போதே தத்துவங்கள் பிறக்கின்றன. அவை நிட்சயமாக நல்வழியைப் போதிப்பனவாகத்தான் அமையுமேயன்றி, சுயலாப நோக்கங்களுக்காக இருக்கமுடியாது.

(58) ஆணைகள் அரச பீடங்களின் அதிமுக்கிய வாய்மொழிகள் அதேசமயம், அவற்றில் நியாயங்களுக்கு உட்பட்ட உண்மைகள் உண்டா? என்று ஆராய்ந்து அறிந்து செயற்படுத்த வேண்டியது, அதை நிறைவேற்றுபவர்களிடையே ஆத்மரீதியான கடமையாகவேண்டும்.

(59) இயற்கை அழகும், எழிலும், வனப்பும் மிகுந்தவை மட்டுமல்ல, மகத்தான மாபெரும் வல்லமை பொருந்திய

சக்தியும் வாய்ந்தவை. இத்தகைய இயற்கையின் சக்திகள் உண்மைக்கும். நீதிக்கும் மட்டும் மதிப்பளிக்கின்றனவே யன்றி, தீமைக்கும், கொடூர செயற்பாடுகளுக்கும் ஒரு போதும் அடிபணிவதில்லை.

(60) தற்பெருமைகளை உள்ளடக்கிய பிரபல்யத்திற்காக என்றால், மட்டுமே உண்மையான சேவைகள் பிரஸ்தாபிக்கப்படும் அன்றேல் அவை பூட்டப்பட்ட பெட்டகத்தினுள் மாணிக்கக்கற்கள் போன்றவை;

(61) இனிமையான நினைவுகள் பொது நோக்கின் உண்மை களிலிருந்து பிறக்கவேண்டும்.

(62) வாழ்க்கை எனும் பெரும் போர்க்களத்தினுள், ஏது மறியாத அப்பாவிகளும் இறக்கநேரிடுவது, சுயலாப நோக்குடைய அரச பீடங்களின் அடக்குமுறைக்குட்பட்ட ஆணை களினாலேயே.

(63) அராஜகங்கள் மலிந்து அதர்மம் மேலோங்கிவரும் இன்றைய உலகில் உண்மையின் அடிப்படையில் வாழும் நியாய வாதிகள், இலைமறைகாய்போல் மறைந்து வாழமுற்படுவதும், ஓடும் புளியம்பழமும் போன்று வாழப் பழகிக் கொண்டதும், சமூகத்தில் உண்மைகளுக்கு மதிப்பில்லை என்பதைப் புரிந்து கொண்டதனாலேயே;

(64) பார்வைகளும், முகபாவனைகளும், இதய உணர்வுகளின் வெளிப்பாடே.

(65) உண்பதற்காக அல்ல வாழ்க்கை, உயிர்வாழ்வதற்கே உணவு.

(66) போலிகளில் மயங்கும் மனிதமனம் உண்மைகளைக் கண்டு கசப்படைகின்றன;

(67) உலகைப் பற்றியும், மனித வாழ்க்கையைப் பற்றியும், பரந்த அளவில் ஆழ்ந்து சிந்திக்கத் தெரியாதவர்கள்;

உடலின் தேவைகளுக்கு மட்டும் மதிப்பளிப்பவர் களே.

(68) உண்மைகள் என்றுமே உறங்குவதில்லை; போலிகளால் தற்காலிகமாக மூடிமறைக்கப்படுகின்றன.

(69) கற்ற கல்வியைக்கொண்டு, பொருளாதாரத்தை மட்டுமே தேடமுற்படுபவர்கள், மலிந்து காணப்படும் சமூகம் விரை வில் சீர்கெட்டுவிடும்;

(70) ஆன்மீக அறிவு வளர்ச்சியற்ற ஒருவரிடம் குடியேறும் கல்வியால் சமூகத்திற்கு எப்பயனுமே கிட்டுவதில்லை. கற் றவரும் அதற்குரிய பெறுமதியை வாழும்காலத்தில் பெறு வதில்லை.

(71) வஞ்சக இதயங்களின் வளர்ச்சி, உண்மை அன்பைக் குழி தோண்டிப் புதைத்துவிடும், ஆனுல் சாகடிக்க முடியாது.

(72) பணம் புரளும் படாடோப வாழ்வு வாழும் போது மனி தன் சித்தாந்தம் பேசுவதில்லை.

(73) இரத்தத்தில் துடிப்பும், இதயத்தில் சபலமும் இருக்கும் இளமைப் பருவத்தில் மனிதன் வேதாந்தியாக மாறிவிடு வதில்லை.

(74) அலைபாயும் உணர்வுகளை அடக்க முடியாதவன் பல வித மான ஆசைகளை வளர்த்துக்கொள்கிறுன்,
ஆசைகளைக் கட்டுப்படுத்த முடியாதவன் பல இடங்களில் ஏமாற்றமடைகிறுன்
ஏமாற்றங்களை ஜீரணிக்க முடியாதவன் துயர் நிறைவதற்கு ஏதுவான ஏக்கங்களுக்கு ஆளாகின்றுன்.
ஏக்க உணர்வுகளின் தாக்கங்கள் அதிகரிக்கும் போது விரக்தியின் விளிம்பிற்கே தள்ளப்படுகிறுன்.
இவ்வாறு ஒன்றிலிருந்து ஒன்று வளர்வதற்கு ஏதுவாகவே மனிதர்களுடைய மனநிலை உணர்வுகள் அமைக்கப்பட்டுள் ளன;

(75) ஆபத்து வேளைகளில் மட்டும் இறைவனை நினைத்துப் பிரார்த் திக்கும் மனிதன், ஆபத்து விலகியதும் இறைவனை மறந்து விடுகின்றுன். இதே போன்று உயிர் பிரிந்துவிடுமோ? என

அச்சமடையும் மனிதன், ஞானத்தின் மையப் பகுதியினுள் ளேயே நுழைந்து விடுகின்றான். பின் அவன் காப்பாற்றப் பட்டுவிட்டால், மாயைகளில் (பகட்டுகளில்) மூழ்கிவிடு கின்றான்;

(76) பரந்த அறிவுள்ளவர்களே கட்டுப்பாடற்ற மனோநிலையி னுள் சிக்கித்தவிக்கும்போது, சாதாரண அறிவுள்ளவர்க ளிடம் புலன் அடக்கத்தை எதிர்பார்ப்பதுசெந்தளிப்பற்ற சோகச் சிரிப்பிற்கு ஒப்பானதகும்.

(77) உயிர்களின் மகத்துவத்தை உணர்ந்து. கூடிவாழ ஆரம்பிக் கும்போது. உண்மையான மனிதன்என்ற அந்தஸ்தைப் பெறுகின்றோம்.

இவ்வாறான அந்தஸ்தை செல்வத்தின் மீது சுமத்தி. அதைத்தேட எதையும் செய்ய முற்பட்டவர்களாலேயே உலகம் சீரிழந்த நிலமைக்குள்ளானது.

(78) தெளிவற்ற சிந்தனைகளால் ஆளப்படும் எந்த ஒருமனித னுமே தனக்கென ஓர் வரலாறைப் படைப்பதில்லை.

(79) துன்பங்களின் சுமைகளைக் கண்டு அஞ்சியவனும், வறுமை யின் பிடியைக் கண்டு தளர்ந்தவனுமே பெரும்பாலான குற்றங்களுக்குரிய கிளைகளை வாழ்க்கைப் பாதையினுள் வகுத்தான். தான் வாழ எண்ணியவனும், தனது தேவை களுக்கு முக்கியத்துவம் கொடுத்தவனுமே வறியவனையும், திருடனையும், உருவாக்கினான். வறுமையும் துன்பங்களையும் கண்டு சுலங்காதவனே பொறுமைக்கு இலக்கணம் வகுத் தவனும், சரித்திரத்தில் தனக்கெனச் சில ஏடுகளை ஒதுக்கி யவனுமாவான்.

(80) ஆசைகளுக்கு அடிமையாகி இருக்கும் போது, தேவை களைப் பெருக்கிக் கொள்கின்றோம். உலக வாழ்க்கையி னுள் அடங்கும் மாயைகளினால் தோன்றும் சிந்தனைகளில் தெளிவேற்படும்போது, ஆசைகளைக் கட்டுப்படுத்தி தேவை களை குறைக்கிறோம்.

(81) இன்பத்திற்காக, இன்பத்தின் போது துள்ளிக்குதிக்கும் இதயம், துன்பத்தின் போது துவண்டு விடுவது இயற்கை துன்பத்தைத் தாங்கி மறைத்துவிடும் முயற்சியில் வெற்றி பெறும் இதயம்;

இன்பத்திற்காக ஒருபோதும் துள்ளிக் குதிப்பதும் இல்லை. துயரத்தில் மூழ்கித் துவண்டு விடுவதுமில்லை.

(82) பலவீனங்கள் என்றுமே நிரந்தரமானவையல்ல, சமூகத்தையும், தன்னையும் உணரும் ஒருவன் தனது தவறுகளைத் திருத்த முற்படும்போது அவனை விட்டகலக் கூடிய தற்காலிகமானவையே பலவீனங்கள்.

(83) சட்டத்தின் கண்களுக்கோ? சமூகத்தின் கண்களுக்கோ? புலப்படாத அந்தரங்க (மறைமுக) குற்றங்கள் நிறைந்த ஒரு மனிதனை இயற்கையால் மட்டுமே தண்டிக்கமுடியும். நடைமுறைக்குச் சாத்தியமான, சுயசிந்தனைகள் சுதந்திரம் வசதி என்பன இருந்தும்.
அவற்றைச் செயல்படுத்தக் கூடிய உடல் வலுவற்ற பாரிய நோய்களாகவே அவை அமையும்.

(84) நாட்டின் தேசிய நலனையும், ஒற்றுமையையும் மக்களுக்கு எடுத்துரைக்கத் தவறுவதோடு, இயற்கை வளங்களைச் சாதகமாகக் கொண்டு, நாட்டை முன்னேற்றுவதற்கான திட்டங்களை வகுத்து நடைமுறைப்படுத்தும் அறிவற்ற அரசபீடங்களாலேயே (அரசிவல்வாதிகளாலேயே) சமூகத்திற்கும். தனக்கும் எவ்வித பயனுமற்ற சோம்பேறிகள் நாட்டில் மலிந்து காணப்படுகின்றார்கள்.

(85) காரிலும், பிளேனிலும் செல்லும் அரசியல்வாதிகள் இயற்றும் சட்டங்கள் அவர்களுடைய கண்களுக்கும், கருத்திற்கும் இசைந்தவர்களுக்கே சாதகமாக அமையும்.
அதே சமயம் அச்சட்டங்கள் அவர்களுடைய கண்களுக்குப் புலப்படாத பல்லாயிரக்கணக்கான காட்சிகளுக்குரியவர்களுக்கும், அவர்களுடைய கருத்திற்கெட்டாத சம்பவங்களில் ஈடுபடும் இலட்சக்கணக்கானவர்களுக்கு மாறானதாகவும் அமையும்.

(86) சிறுபான்மைச் செல்வந்த வர்க்கம், பெரும்பான்மை வறிய மக்களைச் சுரண்டி, அடக்கி ஒடுக்கி, வாழும் அவர்களது வளமான வாழ்வை உற்று நோக்கினால் தம்மிடமுள்ள செல்வத்தின் பலத்தால் அவர்கள் ஆணையிடும் தரத்திலேயே இருக்கின்றார்கள்.
அவர்களது ஆணைகளை நிறைவேற்றுபவர்களும், அதனால் பாதிக்கப்பட்டு வேதனை அடைபவர்களும் ஒரேதரமான

வறிய மக்களே. ஆனால் இவர்களில் ஒரு சிறு ப[illegible]ப சலுகைகளைக் கூடுதலாகப் பெறும் அடியாட்கள் தரமாக வும், இன்னோர் பெரும் பகுதி அந்தச் செல்வந்தர்களிடம் கைகட்டி ஊழியம் புரியும் கூலிகளாகவுமே தென்படு கின்றனர்.

(87) அரசபீடங்களின் வாய்மொழிகளில் உள்ள நன்மைதீமை களை சட்டத்தையும், ஒழுங்கையும் நிலைநாட்டும் பாரிய பொறுப்புக்குட்பட்டவர்களில் உயர் அதிகாரிகள். முதலில் ஆராய்ந்து பார்க்கத் தவறிவிடுகின்றார்கள். இதன் பின் விளைவாக. படைகள் மறுத்துரைக்கமுடியாத இக்கட்டான நிலைக்குத் தள்ளப்படுகின்றார்கள். இவற்றின் மொத்த விளைவாக ஏன் என்ற கேள்வி கேட்கும் உரிமைகளை மக் கள் இழந்துவிடுகின்றார்கள்.

இவ்வாறான ஒரு நாட்டில் நிச்சயமாக குழப்ப நிலைகள் மலிந்தே காணப்படும்.

காரணம் மக்கள் சட்டத்தின் முன்பே கதைக்கத் தகுதி யற்றவர்கள். ஆனால் விரும்பியவர்களுடன் கூடி பேசுவதை மக்கள் என்றுமே கைவிட்டதில்லை.

(88) விரும்பப்படாத வாழ்க்கை, திருத்தப்படாத குற்றங்கள். வேண்டப்படாத அரசு அனைத்திற்கும் எதிரானவர்கள் மக்களே. இவர்களுடன் நாட்டிற்காக என முன்வந்தவர் களும் இணைந்துவிடும்போது மாற்றங்களும், மறுசீரமைப்பு களும் எவராலும் தடுக்க முடியாத நிகழ்வுகளாகும்.

(89) ஒருவருடைய துன்ப துயரங்களின்போது துணை நிற்பவர் கள். பிறருடைய இன்பநிலை கண்டு அகமகிழ்பவர்கள் எதிர்கால சந்ததியினருக்கு நல்வழிகாட்டி. அவர்களது சிறந்த வளர்ச்சி கண்டு பூரிப்படைபவர்கள்.

இன்னொருவருடைய வாழ்க்கைக்கு இடையூறாக இருக்க விரும்பாதவர்கள் கூடுதலாகக் காணப்படும் நாடு சுபீட்ச மாகத் திகழ்வதுடன் பிறநாடுகள் பலவற்றாலும் போற்றப் படும்.

(90) ஒருவருடைய தவறைச் சுட்டிக்காட்ட முற்படும்போது நாம் அத்தவறினின்றும் விலகி நியாயத் திசையில் நின்று கொண்டே அதைச் சாதிக்க முடியும்.

...வருக்கு மத்தியில் நல்லவராக வாழ்வது என்றுமே பெருமதிப்புக்குரியதில்லே. தீயவருக்கு மத்தியில் நல்லவராக வாழ்வதே. வாழ்க்கைப் போராட்டத்தில் சோதனை மிகுந்த நிகழ்வாகிறது.

ஆடம்பரங்களுக்கு மத்தியில் தேவைகளைக் கட்டுப்படுத்துவதும். பகட்டுகளுக்கிடையில் பணியைப் பேணிப் பாது காப்பதும். அதிவேக பரபரப்புகளுக்கு மத்தியில். (வறுமைக்கு மத்தியில்) பொறுமை கொள்வதும் இதற்கு ஒப்பானது;

(92) முதுகெலும்பற்ற சமூகத்தின் மத்தியில் உலாவும் நாம். திரும்பிப்பார்க்கும்போது. போலியான காட்சிகளே தென்படும் முன்னுக்குப் பார்த்துக் கொண்டு செல்லும் போதும் போலிக்காட்சிகளே தென்படும். நாம் பார்க்காதபோது தான் பல உண்மையான காட்சிகள் நடந்து முடியும்.

(93) ஏதோ ஒரு சக்தியின் விளைவால் (பகுத்தறிவு மழுங்கடிக்கப்படும்போது) எமது சுய சிந்தனைகளை நாம் இழக்கும் போதே சமூகத்தால் இழிவாகக் கருதப்படும் சில தவறுகள். (நிகழ்ச்சிகள்) நடந்து முடிகின்றன.

பின்பு நாம் விழித்துக்கொள்ளும் போது (சுய சிந்தனை பெறும் போது) வருத்தப்பட்டாலும். சமூகம் அதற்கு மதிப்பளிப்பதில்லே. இதனலும் பலர் திருந்திவாழும் சந்தர்ப்பத்தை இழக்கின்றூர்கள்.

(94) ஐந்தில் வளேய விரும்பாதது. அறிவியல் ரீதியாக தாய், தந்தையின் தவறே. ஐம்பதில் வளேயாததும் அறிவியல் ரீதியாக தாய், தந்தையின் (இறைவனின்) தவறே என்று எண்ணும் அறிவே உலகில் மலிந்து காணப்படுவது. ஏன்? இதுவும் நன்மை தீமைகளாகிய இரு வேறு சக்திகளின் லீலேயா?

(95) இருபத்திஞன்கு மணிநேரமும் இன்பத்தைப் பெறுவதில் பின்னிற்காத உடலும். அறிவும். சில நிமிட நேரம் மட்டுமே தோன்றும் துன்பத்தின்போது துவண்டுவிடுவது எவ்வளவு இயற்கையானதோ? அவ்வாறனதே மனிதனிடம் அன்ருடம் ஏற்படும் சிறு சிறு தவறுகளுமாகும்.

(96) பணம், பொருள், ஆடம்பரவசதிகள், சுகபோகவாழ்க்கை அந்தஸ்து. என்பனவற்றே தன்னகத்தே கொண்டுள்ள

அதிகாரப் பீடத்தின் அரசபீடத்தின் உயர் கதிரையை (தலைமை ஆசனத்தை) தாசிவீடு என வர்ணிப்பதில் தவறேதும் உண்டா?

ஏனெனில் இக் கதிரையின் அவசியத்தை நோக்கி. பல நூறுபேர் போட்டியிடுகின்றனர்; ஒருவரை ஒருவர் அழித்து வாழ முற்படுகின்றனர். தாசிவீடும் இவ்வாறு பலரைத் தாங்கும் நிலை கொண்டதே. அங்கும் எவருக்கும் இடமுண்டு, இங்கும் எவருக்கும் இடமுண்டு.

(97) ''மக்களின் நலன்'' என்னும் பாரிய அர்த்தங்களை உள்ளடக்கியபதம். சுயதேவைகளின் பூர்த்திக்காக போலியாகப் பயன்படுத்தப்படும்போது. ஒரு நாட்டில் அரசியல் கட்சிகளினதும் எண்ணிக்கையே பெருகும்.

(98) பல்வேறு தேசிய இனங்கள் வாழும் ஓர் நாட்டில். பாகுபாடான அபிவிருத்தி முயற்சிகள். இனங்களிடையே ஒற்றுமையை வலியுறுத்தவோ? தேசிய நலனை முன்னெடுக்கவோ? ஒருபோதும் உதவாது. மாறாக நாட்டு மக்களிடையே அதிருப்தியையும்; அவர்களது நலனையும் பாதித்து குழப்ப நிலைகளைத் தோற்றுவிக்கவே உதவும்.

(99) நாட்டில் அரசாட்சியைப் பொறுப்பேற்கும் ஒருவருக்கு ஜனநாயகத்தின் மையப்பகுதி தெரியாமல் போகுமேயானால். அந்த நாட்டில் ஜனநாயகம் பேச்சளவில் மட்டுமே செயல்படும் அதன் உள் அர்த்தங்களோ? தார்ப்பரியங்களோ? ஆட்சிமுறையில் எங்கும் சூன்யமாகவே காட்சியளிக்கும்.

(100) ஒரு நாட்டின் வெகுஜனத் தொடர்பு சாதனங்கள் அந்த நாட்டின் முன்னேற்றத்திற்கும் பயன்படும்வரை அவைகளின் பெறுமதி உட்பட அவை நிலைத்தே செயல்படும்,

தவறி அவை ஏனோ? தானோ? என செயல்படும் காலம் உருவாகுமேயானால். அவை சிதையும் காலம் கூடிய விரைவில் உண்டு. என்பதை நாடு எதிர்பார்க்க முடியும்;

❁ ❁ ❁

## இன்றைய உலகில்!

- அன்பு பிறக்கும் இதயங்களில் ஆணி அடிக்கப்படுகின்றது.
- பண்பெனும் பெருமரத்தின் கிளையைக் கறையான் அரிக்கின்றது.
- பாசத்தின் பாதைகள் நிரந்தர இருளில் மூழ்குகின்றன.
- நியாயத்தின் மொட்டுகள் மிருகங்களுக்கு இரையாகின்றன
- "நீதி" என்பவனின் வாய் அவனது கரங்களைக் கொண்டே அடைக்கப்படுகின்றது.
- இல்லறத்தின் இன்ப விளக்கெரிய இரும்புப் பெட்டியும் சாவியும் தேவையாகின்றது.
- ஆசையெனும் விதையினிலே கொடூரமெனும் கொடி முளைக்கின்றது.
- உண்மையெனும் கரங்களின் விரல்கள் ஒடிக்கப்படுகின்றன'
- தியாகமெனும் பெரும்சுடர் ஒளியின்றித் தென்படுகின்றது.
- போலியென்ற பதத்திற்கு வர்ணங்கள் பூசப்பட்டுஜோடனையாகிறது.
- உத்தமர் என்பதற்கு உண்மையான பொருள் தெரியாது மக்கள் குழம்புகின்றனர்.
- இயற்கைகள் பொய்த்ததற்கு; அஞ்ஞானிகள் விஞ்ஞானம் எனப் பெயர் சூட்டுகின்றனர்.
- மக்களிடம் ஏக்கம் நிறைந்துள்ளதாகத் தெரியவில்லை. என்பவர்கள்! வறுமை வறட்சியின் விளைவன்றி வேறில்லை என்கின்றனர்.
- ஏழைகள் பாவம், என்பவர்கள்! தமது திரண்ட செல்வத்தைச் சுரங்கப்பாதையினுள் பூட்டுகின்றனர்.
- நாட்டுக்காக வாழ்கிறேன் என்பவனுக்கு நாட்டில் நாற்பது பிள்ளைகள்.
- ஆடம்பரத்தை விரும்பவில்லை என்பவன் அயராது விமானத்தில் பறக்கிறான்.
- பகட்டுகளை வெறுக்கிறேன் என்பவனது வாயில் படிக்கட்டில் பளிங்குக் கற்கள் பதிந்துள்ளன;

o நான் உங்கள் தோழன் என்பவன்! மாலைக்காகக் கழுத்தை நீட்டுகிறான்.

o தேசவிரோதி எனப் பிறரை வர்ணிப்பவர்களது பணம் பிற தேசத்து வங்கிகளில் தூங்குகின்றன

o அன்னையே என்தெய்வம் என்பவன் பிறன் மனைவியை அன்னையாக்குகின்றான்.

o தந்தை சொல்மிக்க மந்திரமில்லை என உரைப்பவர்! இன்னொரு குழந்தையின் தந்தையைக் கொல்கின்றனர்.

o சகோதர பாசத்திற்கு ஈடேகிடையாது என்று சொல்லிக் கொண்டே எல்லையில் சகோதரனை வெட்டுகின்றான்.

o உங்களுடைய துன்பத்தை நான் போக்குவேன் என்பவரோ? துயரத்தின் வாசலை அவர்களுக்குக் காட்டுவதோடு, துன்பத்தை மூட்டையாக்கி அவர்களது முதுகில் சுமையாக்கி விடுகின்றார்கள்.

o ஆருயிரே என்றவன்! சிலநாட்களில் எப்படியும் உன் உயிர் போயே ஆக வேண்டுமென்கின்றான்.

o கணவனே கண்கண்ட தெய்வம் எனப் படித்தவள் கள்ளக் காதலனுக்காக கணவனையே கொல்லத் துணிகின்றாள்.

o உத்தமி நான் என்பவள், இருட்டில் பத்தினித் தன்மைக்கு விலைபேசுகிறாள்.

o பொல்லாத உலகம் என்போர்! அதை உருவாக்கியதே தாம் என்பதை மறந்துவிடுகின்றனர்.

o இங்கு நானும் பலவீனமானவனே! ஆனால் குற்றங்களின் மொத்த வடிவமல்ல குறைகளைக் கொண்டுள்ள சிறு உருவமே. ○


சுகாதார முறையுடன் சுவைபடத் தயாரிக்கப்பெற்ற

ஐஸ்கிறீம் வகைகள், மற்றும் குளிர்பான வகைகளுக்கு

இன்றே விஜயம் செய்யுங்கள்

**O கல்யாணி கிறீம் ஹவுஸ் O**

73, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

# தன்னிலே உணர்பவன் பொதுநலத்தை மதிக்கின்ருன்.

துன்பத்தின் பாதையில் துயரத்தின் காலடிகளைப் பதித்த எவருமே வாழ்க்கையை ரசித்து மகிழ்ந்ததில்லை.

இதேபோல் செல்வத்தில் மூழ்கி இன்பங்களை மட்டுமே எதிர்பார்த்தவர்கள் துயரத்தின் அடிச்சுவடிகளை அறியாமலு மில்லை.

ஆனுல்! செல்வத்தின் மத்தியில் துயரத்தின் பாதைகள் வெகு விரைவில் மறைந்து விடுகின்றன.

அதேசமயம்! ஏழ்மையின் கோரப்பிடியினுள் தொடர் கதையே துன்ப துயரங்கள்தான்.

கேட்பதன் மூலம் அறியும் விடயங்சள் அனைத்தையும் கண்டு கொள்ளும் சந்தர்ப்பம் அற்ற கண்கள். கண்டு ரசிக்கும் ஓரிரு காட்சிகளின் மீது மனிதன் தீராத மோகம் கொள்ளும் போது! சமூகத்தின் மத்தியில் மாருத வடுக்கள் பதிந்து விடுகின்றன.

இவ்வாருன வடுக்களைச் சுமந்து கொண்டிருக்கும் உலகின் துயர்நிறைந்த ஏடுகளினுள். தன்னிலே உணர முடியாதவன் கொண்ட ஆசையே கருவாகின்றது.

நன்மை, தீமை என்ற இரு வேறு முரண்பட்ட சக்திகளை மூலதாரமாகக் கொண்ட உலக வாழ்வினுள் செல்வம் வறுமை! இன்பம், துன்பம் உண்மை, பொய் என்ற எதிர்மறை நிகழ்வுகளே மனிதகுலத்தை ஆட்டிப்படைத்து வந்துள்ள போதும், இறைவன், பசாசு என்ற பதங்களினுள்ளேயே அவை முடிவு பெற்றன.

அதேசமயம்! "தன்னிலே உணர மறுப்பவன்" என்ற பதத்தை எடுத்து ஆராய்ந்து பார்த்தால்! இன்பம், பொய் என்ற இரு நிகழ்வுகளும் செல்வம் என்ற துணையைப் பக்கபலமாகக் கொள்ளும்போது! மேற்படி பதம் தன்னுள் பலகிளைகளைப் பரப்பிக் கொள்ளுகிறது. அவை பெரும்பாலும் தீமை என்ற பாதையிலேயே பயணம் செய்கின்றன.

அதேவேளை! துன்பம், வறுமை என்பனவற்றின் கருவே ஏழ்மையாதலால். இங்கு பொறுமையே அவசியமாவதோடு,

வறுமை தீர்வதே கொள்கையாகின்றது. இவை நடைமுறை யாக உண்மையே உறுதுணையாகின்றது.

சில சமயம் ஏழ்மை வறுமையை நெருக்கும் போதும்! வறுமை உண்மையை உதறும் போதும் பிறக்கும் கொடூர சிந்தனைகளும் தீமை என்ற பாதையிலேயே பயணம் செய்தா லும் முன்னையவர்களைக் காண்பதைக் காட்டிக்கொள்வதில்லை:

இவ்வாறு தன்னிலை உணர்பவனைத் தடுத்து நிறுத்த உல கில் பல்வேறு வகையான கிளைப்பாதைகள் உருவாகியுள்ள போதும்! பெரும்பாலும் அவை செல்வத்தையே மையமாகக் கொண்டுள்ளன.

இவற்றிற்கு விதிவிலக்காக துன்பத்திலும், வறுமையிலும் பொறுமையிழக்காது. செல்வத்திலும், இன்பத்திலும் உண்மை வழுவாது! மனித நேயம் ஒன்றையே குறிக்கோளாகக் கொள் பவன் தன்னிலை உணர்வதோடு பொது நலத்தையும் மதிக் கின்றான்.

குறிப்பாக! இரு உடல்களின் இயற்கை உணர்வினால் ஏற் படும் உறவால் உருவாகும் உயிர். உடலை விட்டுப் பிரிந்து விட்டால் என்ற வெறுமை உணர்வைச் சிந்திக்கும் பகுத்தறிவு தன்னிலை உணர்கின்றது.

மனித இனம் இவ் உணர்வில் ஊன்றித்திளைக்கும்போது தானாகவே பொதுநல உணர்வு (மதிப்பு) இதயங்களில் ஊன்றி விடுகின்றது அப்போது செல்வம் என்றால் என்ன? என்ற அர்த் தம் மனிதனுக்குப் புரிந்து விடுகின்றது

▽ ▽ ▽

புகைப்படப் படப்பிடிப்புத்துறையில்
நவீனமயக் கையாளல்களுடன். கருத்தைக் கவரும்
பலவர்ணப் பிரதிகளைப் பெற்றிட
இன்றே நாடுங்கள்!

நியூ கொலின் ஸ்ரூடியோ

பிரதான வீதி. : : பண்டத்தரிப்பு.

உரிமையாளர் ; வி. செல்வச்சந்திரன்

# ◐ பலவீனமே மனிதனின் மாபெரும் விரோதி

துயரங்கள் நிறைந்த உலகில் வாழும் மனிதனின் மாபெரும் விரோதி அவனது பலவீனமே.

குற்றச்சம்பவங்களின் மொத்த உற்பத்தி முதற்கொண்டு ஏமாற்று என்ற பதத்திற்கு மனிதன் பலியாகக் காரணமாக அமைவதுவரை எங்கும் பலவீனமே பயன்படுகின்றது.

பலவீனம் என்ற பெருவிருட்சம் பல்வேறுவகையான கோணங்களில், பலகிளைகளாக உலக மாந்தர் அனைவரிடமுமே காணப்படுகின்றது.

ஒருவன் தனது நியாயமற்ற தேவைகளுக்காகாவோ, நேர்மையற்ற பாதைக்கு உறுதுணையாகவோ பிறரைப் பாவிக்கும் நிலையில் கால்வைக்கும்போது! அவர்களது பலவீனத்தையே பெரிதும் கருவியாகப் பயன்படுத்த முற்படுகின்றான்.

ஒரு மனிதனின் பலவீனம், ஒரு சமூகத்தின் பலவீனம், ஒரு நாட்டின் பலவீனம் என உலகில் பெரும் குழப்பத்திற்குரிய அடிமை நிலை தோன்ற பலவீனமே எங்கும் பயன்பட்டிருக்கின்றது.

பெரும்பாலும் பகுத்தறிவின் ஆலோசனை இன்றியே பலவீனமானது மனிதர்களிடம் இருந்து வெளியேறிவிடுகின்றது.

உலகின் பெரும்பாலான கறைபடிந்த வரலாறுகளின் கருப்பொருளை எடுத்து ஆராய்ந்து பார்த்தால்! அங்கு பலவீனம் மனிதஅறிவை மயக்கியிருப்பதைத் தெளிவாகக் கண்டு கொள்ளலாம்.

மனித வாழ்க்கையின் நடைமுறைகள், பலபாதைகளில் திசைமாறி பல்வேறுவகையான ஏற்றத்தாழ்வுகளையும், தராதர வேறுபாடுகளையும் தோற்றுவிக்கப் பலவீனமே பெரிதும் பங்காற்றியுள்ளது.

சலனம், சபலம் ஆசை மோகம் என்ற மனிதனின் உடல் தேவைகளை வேண்டிநிற்கும் உணர்வுகளும் சேர்ந்து பெற்றெடுக்கும் ''பலவீனமே''! அவற்றைப் பூர்த்தி பண்ண வேண்டிய கடமையுடன் கூடிய நிகரற்ற ஆயுதமாகின்றது.

உலகில் வாழும் மனிதர்கள் அனைவரும் எங்கோ ஓரிடத்தில் சரி! இதற்கு அடிமைப்பட்டே வாழ்ந்து மடிகின்றார்கள்.

மிக அபூர்வமாக பலவீனத்தை வென்று. வாழ்ந்து மடிந்த ஒருவரது வாழ்க்கையின் பெருமைகளை எடுத்துரைத்துச் சிலை வைக்கும் உலகப் பெரும் தலைவர்கள் கூட பலவீனத்திற்கு அடிமைப்பட்டிருப்பதாலேயே பல்வேறு வகையான பேதங்களுடன் உலகம் அமைதியை இழந்து காணப்படுகின்றது.

◉ ◉ ◉


உங்கள் கலர் பிலிம் சுருள்களை
3 மணி நேரத்தில்
போட்டோ மாஸ்ரர் 707 மூலம்
படமாக்கிக் கொள்ளவும்,
மற்றும் கறுப்பு - வெள்ளைப் படங்களையும்
உடனுக்குடன் பெற்றுக்கொள்ள

றூபி போட்டோ
10, 14, ஸ்ரான்லி வீதி, — யாழ்ப்பாணம்.

# நடைமுறைக்கு உதவாத உணர்வுகள்

மனிதனின் அன்றாட நடைமுறைகளுக்கு ''அறிவே'' ஆதாரமாகத் தென்பட்டாலும் அவனது செயற்பாடுகளுக்கு கந்த எண்ணங்களைத் தோற்றுவித்துக் கட்டளை பிறப்பித்து அறிவை ஆட்டிப்படைக்கும் ஆற்றல் உணர்வுகளுக்கு மட்டுமே உரியது.

உண்பதும், உடுப்பதும், உறங்குவதும் என்ற குறுகிய வட்ட வாழ்க்கையிலிருந்து பறந்தோடிப் பரந்து வாழ்வது வரையிலுள்ள நடமாட்டங்களுக்கு உணர்வுகளின் உந்துதலே அடிப்படைக் காரணியாகும்.

மனிதனின் அறிவில் ஏற்பட்ட குழப்பங்களினால் உலகில் மலிந்து காணப்படும் குற்றச்சம்பவங்களுக்கும், தெளிவடைந்த அறிவால் உலகுக்கு அள்ளி வழங்கப்பட்ட தத்துவ ஞான ஏடுகளின் தோற்றங்களுக்கும் மனித மனங்களில் விளைந்த பல்வேறுவகையான உணர்வுகளே மூலக் கருவாகும்.

உலகில் வாழப் பிறக்கும் மனிதன், தன்நிலை உணர்வதன் மூலம்தான் இங்கு சிறப்பாக வாழ முடியும் என்பதே பொது நோக்கில் தென்படும் உண்மை.

தான் வாழும் சமூகத்திலும், நாட்டிலும், தான் ஆராய்ந்தறிய வேண்டிய உலகிலும் மனிதன் தன்னிலை உணரத் தவறும்போதே! குற்றச் சம்பவங்களின் கிளைகள் பெருக்கமடைகின்றன.

படாடோபங்களும், பகட்டுகளும், சிற்றின்ப மாளிகைகளும் மலிந்து காணப்படும் இன்றைய உலக சுற்றுாடல்களைக் கண்டு ரசிக்கும் மனிதனின் கண்களில் இருந்து மீட்டப்படும் தந்தியால் பிறக்கும்: ஆசைகளும், தேவைகளும் எனும் உணர்வுகளால் கிளர்ந்தெழும் உடல் இச்சைகளுக்குத் தலைகுனியும் ''மனித அறிவு'' அவ்வுணர்வுகளிலுள்ள உண்மைகளை ஆராய்ந்து நடைமுறைப்படுத்த வேண்டியதே மிக, மிக அவசியமாவதோடு மனிதனின் பலவீனத்தை வெற்றி கொள்வதாகவும் அமைகின்றது.

பல்வேறு வகையான மாறுபட்ட குணாதிசயங்களை உள்ள டக்கிய மனிதர்களைத் தனது அங்கமாகக் கொண்டிருக்கும் சமூகத்தின் மத்தியில், பிறருடைய நியாயமான தேவைகளை வலியுறுத்தும் உணர்வுகளுக்கு ஒவ்வொருவரும் மதிப்பளிக்கும் போதே! மனிதகுலத்தின் மாண்பினை வெளிப்படுத்தும் சுபீட்ச மான வரலாறு தோன்றும் என்பதே உலகைப் புரிந்து கொண்ட ஆன்றோர்கள் வகுத்த நற்பாதை ஏடுகளின் எடுத்துரைப்பாகும்;

இன்னொரு மனிதனுடைய நியாயமான வாழ்க்கைப் பாதை யில் குறுக்கீடுகளை ஏற்படுத்தத் தூண்டும் சுயநலவாத சுயலாப நோக்கங்கள் நிறைந்த உணர்வுகளே மனிதனால் நடைமுறைப் படுத்தப்படாத உணர்வுகளாக இருக்கவேண்டும்;

துன்ப துயரங்களின் ஏடுகளைத் தனது நிரந்தர உடமை களாகக் கொண்டு. காலம் காலமாக மனித குலத்தைப் பின் பற்றி வதைத்து வரும் கறைபடிந்த பல வரலாறுகளின் கட்டுக் கடங்காத பெருக்கத்தைக் குறைத்து! போராட்டங்கள் நிறைந்த உயிர்வாழ்வின் அவசியத்தை மனித இனம் மதிக்கும் நிலை உருவாக வழி வகுப்பதே உலகுக்கு இதனால் கிடைக்கும் பெரும் பயனாகும்.

தன் மனச்சாட்சியறிய உணர்வுகளில் உண்மை தென்படும் மனிதன் அமைதியுடன் ஆத்மாவிற்குச் சாந்தி வழங்குகின்றான்; அவ்வேளை அவனது அறிவிலும் தெளிவே காணப்படும்.

வறுமையின் காரணத்தை உணர்ந்தேன்.
வாழவேண்டிய அவசியத்தை உணர்ந்தேன்
பொறுப்புகளின் பாரத்தை உணர்ந்தேன்.
பொறுமையின் பெருமையையும் உணர்ந்தேன்;
உண்மைகளின் தத்துவத்தை உணர்ந்தேன்.
உருக்குலைக்கும் எண்ணங்களை உணர்ந்தேன்.
கட்டுப்பாடற்ற தேவைகளை உணர்ந்தேன்.
பிழைகள் சில இருப்பதையும் உணர்ந்தேன்
என்னிலை இன்னும் உணரவில்லை என
ஏங்குவதும் கூட ஓர் உணர்வே;

X X X

# நீதியின் கவிதைகள்

யாருக்கு யார் சொந்தம் சொல்லவோ - என்றும்
உயிர்கள் உன் சொந்தம் அல்லவோ
நீதியின் காவலன் நீ அல்லவோ — உன்னை
உயிர்கள் போற்ற வேண்டுமல்லவோ.

ஊருக்கு நான் ஒன்று சொல்லவோ - உள்ளம்
இறைவனின் சதுரங்கம் அல்லவோ
உயிர் என்று நிலைத்திருப்பதில்லையே - இதை
மனிதர்கள் மறந்து வாழலாகுமோ.

ஆயிரம் கனவு உள்ளம் காணுமே - உடல்
மடிந்தால் மண்ணாகிப் போகுமே
யார் இதை உணர்ந்து இன்று வாழ்கிறார் - மனிதன்
போராடித்தான் வாழவேண்டுமா.

---

உண்மை எனது மூச்சாகும்
உயிரின் கரு நீதியென்பேன்
உலகம் இதை ஏற்கவில்லை
மாயையில் நான் மூழ்கிவிட்டேன்

சுமையின் நடுவில் சுழன்றுவந்தே
போலிகளை உணர்ந்து விட்டேன்
மீண்டும் நீதி ஓங்கிடவே
தெளிந்து நானும் உண்மை கொண்டேன்

இதயம் எங்கும் ஒளிவேண்டும்
மடமை நீங்கும் வரம் வேண்டும்
கொடுப்பது உன் கருணையப்பா
பெறுவதே என் கடமையய்யா.

வாழ்க்கையில் வறுமை வாட்டிட ஒருவன்
பொறுமையினை இழந்து பிறர்பொருள் கொண்டால்
சத்தமேயின்றி சந்தடியும் செய்யாது
தம்பொருள் அனைத்தையும் புதைத்திடுவர் எங்கனும்

வதைபடும் திருடரை எங்கேனும் கண்டால்
இவனுக்கு வேணும் இதுவும் காணாது
இப்படிப் பலரையும் ஒழித்திட வேண்டும்
என்றே கூறிடுவார் செல்வச் சீமான்களே.

உத்தமர் நாமே உண்மைகளும் எம்மிடமே
என்றே கூறிக்கொண்டு பலரது உழைப்பையும்
பக்குவமாய் அட்டைபோல் உறிஞ்சியே குடித்திடும்
இவர்களையும் விடவா கொடியது களவு.

செய்தது களவுதான் காரணம் என்ன
வாழ்க்கையில் வறுமையா வாழ்ந்திட – முடியாதா
இல்லாமை உணர்வுகளை ஒழித்திட முடியாதா
என்பவை அனைத்தையும் ஆழ்ந்தே சிந்தித்தால்
வதைபடுவோர் என்றும் யாரென்பது புலனாகும்.

சட்டம் வேண்டும் நாட்டிற்கு
சாந்தி இல்லாதோர் வாழ்ந்திட
நீதி வேண்டும் ஸ்தலங்களில்
நியாய வாதிகள் பிழைத்திட
அறிவுவேண்டும் அரசுகளிடம்
உண்மை உலகில் நிலைத்திட.

மனிதன் பிறந்தான் நெறியுடன் வாழ
மறந்தனர் அனைவரும் மாயையினுள்ளே
கோடியில் ஒருவர் உணர்ந்ததனாலே
தத்துவ ஏடுகள் மலர்ந்தன உலகில்.

சின்னம் சிறிய இதயத்தினுள்ளே
வண்ணக் கனவுடன் எண்ணங்கள் கோடி
ஆசையும் தேவையும் பெருகியதாலே
துயரத்தின் ஏடுகள் மலிந்தன உலகில்

உண்மை அன்பின் உயர்வினை மறந்து
உடலின் இன்பத்தைத் தேடியபோது
நன்மையும், தீமையும் நடுவினில் நின்றே
வதைத்தது மனிதனைக் காலங்கள் தோறும்.

விடிவிதற்குண்டோ தருபவர்யாரோ
நடைமுறைத்தவரோ ஊழ்வினைப்பயனோ
அறிவெதற்கென்பதை ஆழ்ந்தேபார்த்தால்
தவறுகள் இதயத்தின் எண்ணங்கள் தானே.

செல்வம் உடலுக்குத் துணைநிற்கும்போது
மனிதனின் மனதினில் பிறப்பது தீமை
கொடுமை இதுவெனக் குமுறிய சிலரால்
பிறந்தவை தானே புரட்சியின் பாதை

தூங்கிட மறுத்த வறுமையும் பிணியும்
துயரத்தின் மத்தியில் உழன்றிட்ட போது
பரந்து விரிந்த கள்வர்கள் பயத்தால்
செல்வமும் தூங்கிட மறுத்தது உலகில்.

உருவம் ஒன்றெனத் திகழ்ந்தும் மனிதன்
தெருவில் உயர்வுடன் தாழ்வு கொண்டானே
பண்பினை மறந்து பலிகொண்டபோதே
தீமையின் பாதைகளை தொடர்ந்தன ஏட்டில்.


✿ கண்ணைக் கவரும் வண்ண ஓவியங்கள்
✿ கருத்தைக் கவரும் கலைச்செல்வங்கள்
✿ இதயத்தை ஊடுருவும் எண்ணிலா வர்ணங்கள்

அனைத்தையும் உள்ளடக்கிடும் புகைப்படத்துறை.
இத்துறையில் விஞ்ஞானத்துவ முன்னேற்றத்தை
வளர்த்திட கொம்பியூட்டர் பிரிண்டிங் அன் புரோசசிங்
செய்து உங்கள் உருவமைப்பை இயற்கையுடன்
இணைந்ததாகக் கண்டிட,

— இன்றே நாடவேண்டிய ஸ்தாபனம் —

**ஜெகன் போட்டோ**

மணிக்கூட்டு வீதி,
(ரவிமோகன் ரியூட்டரி முன்பாக)
பெருமாள் கோவிலடி,
யாழ்ப்பாணம்.

ஈழம் வாழ் தமிழ் மக்களுக்கு
ஓர் அரிய சந்தர்ப்பம்!

சென்னை மவுண்ட் ரோட்
புதிய ஜெமினி கொம்பிளக்சில் அமைந்துள்ள

**'சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்'**
**நிறுவனத்தார்**

**இலங்கை வாழ் தமிழ் மக்களின் நன்மை கருதி**
யாழ்ப்பாணம், பெரியகடை 24/1. இலக்கத்தில்

**சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்**
**என்னும் தமது கிளை ஸ்தாபனத்தை**
**அமைத்துள்ளனர்.**

- சத்திய சாயிபாபாவின் நேரடித் தரிசனத்தைக் காண விரும்புகிறீர்களா?
  பல புனித ஸ்தல யாத்திரைகளுடன் சத்திய சாயிபாபா வின் நேரடித் தரிசனமும் காணலாம்.
- கல்வி கற்கும் மாணவ - மாணவிகளே! உங்களுக்கு இந்தியாவில் உயர்கல்வி வசதிகளும் செய்து தரப்படும்.
- கனடா, ஜேர்மனி ஆகிய நாடுகளுக்கு மட்டும் நம்பிக்கை யுடன் பிரயாண ஒழுங்குகள் செய்து கொடுக்கப்படும்.

**முற்றிலும் குளிரூட்டப்பட்ட**
**ஒரு நம்பிக்கையான ஸ்தாபனம்.**

# சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்

**இல. 24/1, பெரியகடை வீதி,**
**யாழ்ப்பாணம்.**

---

தலைமை அலுவலகம்;

# சாயி ரவல்ஸ் அன் ரூர்ஸ்

இல. 33, 1ம் மாடி,
(ஜெமினி ஸ்ருடியோ அமைந்துள்ள புதிய ஜெமினி கொம்பிளக்ஸ்)
602, மவுண்ட் ரோட், சென்னை - 60006,
தமிழ்நாடு.
தொலைபேசி; 47538 .

# நீதி

○ 'உன்னை நீ நேசிக்கும் வரை உலகத்தையும் நேசிக்கிறாய். உன்னை நீ வெறுக்கும்போதே உலகத்தையும் வெறுக்கிறாய். உன்னை நீ வெறுக்கும் போது உலகத்தை நேசிக்கக் கற்றுக்கொள். அப்போது நீ ஞானியாவாய். இதேபோன்று! உன்னை ஒருபோதும் நேசிக்காதே. ஏனெனில், நேசிப்பவை எதுவுமே உலகில் நிலையற்றவை'.

○ 'இறப்பைக் கண்டு நான் கலங்குவதுமில்லை. இறந்து விடுவேனோ என அஞ்சுவதுமில்லை. ஏனெனில் மனித உடலின் மறைவே இறப்பு என்பதை எவரும் மறுக்க முடியாதாகையால்' ஆனால்! பயனற்ற முறையில் இறப்பதை நான் மிக வன்மையாக வெறுக்கிறேன். அப்படி இறக்க விரும்பவுமில்லை. காரணம்! மனித குலத்தின் மீதும் என் மீதும் இறைவன் சுமத்திய கடமைகள் எண்ணிலடங்காதவை'.

